ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமானுஜாய நம:

# நம்பெருமாள் விஜயம்

(ஸத்யம் ஸத்யம் புந: ஸத்யம் யதிராஜோ ஜகத்குரு)

(மலர்-63) Jan (1) / 2010



நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்

**'ஸ்ரீ அஹோபில தாஸன்' க.ஸ்ரீதரன்**

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:
திருவே தஞ்சம்
திருவரங்கனே தஞ்சம்
தஞ்சமடைந்த நம் ராமானுஜன் திருவடிகளே தஞ்சம்

கைப்பொருள்கள் முன்னமே கைக்கொண்டார் காவிரி நீர்
செய்ப்புரள ஓடும் திருவரங்கச் செல்வனார்
எப்பொருட்கும் நின்று ஆர்க்கும் எய்தாது நான் மறையின்
சொற்பொருளாய் நின்றார் என் மெய்ப்பொருளும் கொண்டாரே.

காவேரி வர்த்ததாம் காலே காலே வர்ஷது வாஸவ:
ஸ்ரீரங்கநாதோ ஜயது ஸ்ரீரங்கஸ்ரீச்ச வர்த்ததாம்

ஸத்யம் ஸத்யம் புந: ஸத்யம் யதிராஜோ ஜகத்குரு

## உட்பொதிவு


1. ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாமம் (ஸ்வாமி பராசரபட்டர் பாஷ்யம்)…………………......3

2. ஸ்ரீபாஷ்யம் …………………………………………………………………......8

3. ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம் ……………………………………………….……..12

4. ஸ்ரீவசனபூஷணம்………………………………………………………………...17

5. திருவாய்மொழி (ஈடு வ்யாக்யானம்)……….……………………………………...25

6. திருமாலை ……………………………………………………………………....30


Website: www.namperumal.com email: sridharan_book@yahoo.co.in
Blog: namperumal.wordpress.com Groups: groups.yahoo.com/emperumanar

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீபராசரபட்டர் அருளிச் செய்த

# ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாம பாஷ்யம்

(பகுதி – 40)

## 177. மஹாசக்தி:

மிகுந்த சக்தி உடையவன். பசுபதியைத் தேவதையாகக் கொண்டுள்ள பாசுபதமதம் என்பது கூறுவது என்னவென்றால் – பசுபதியின் ஸங்கல்பம் மூலமாக உலகம் உண்டாவதால், பசுபதியே நிமித்த காரணம் ஆவான்; ஆனால், அவன் உலகமாக ஆகாத காரணத்தால் உபாதானக் காரணம் ஆக மாட்டான் என்பதாகும். (ஒரு குயவன் பானை ஒன்றை ஒரு சக்கரம் கொண்டு செய்கிறான். இங்கு குயவன் = நிமித்த காரணம், மண் என்பது பானையாக மாறுவதால் அதுவே உபாதானக் காரணம், சக்கரம் முதலானவை ஸஹகாரி காரணம்). ஆனால் எம்பெருமான் மஹாசக்தி என்பதால் இவனே நிமித்த காரணம் மற்றும் உபாதானக் காரணமாக உள்ளான். இவன் தனக்கு உதவியாக எந்த சாதனங்கள் இருந்தாலும் இல்லாவிட்டாலும், எப்போதும் எதனையும் படைக்கும் திறன் கொண்டுள்ளான். தனது சரீரத்தின் ஒரு பகுதியான ப்ரக்ருதியை உலகமாக மாற்றவும், சாதனங்களைச் சரிவர உபயோகம் செய்வதற்குத் திறன் கொண்டவனாகவும் உள்ளான். சிலந்தியானது தன்னுள்ளிருந்து வெளிப்படும் எச்சிலையே தனது வலையாகப் பின்னுவதால் சிலந்தியே உபாதானக் காரணமும், நிமித்த காரணமுமாக உள்ளது என்று கூறுவர். அற்பமான சிலந்தியையே இவ்விதம் இரண்டுமாகக் கூறும்போது, அனைத்து விதமான சக்தியையும் கொண்ட ஸர்வேச்வரன் இவ்விதம் அனைத்துவிதமான காரணங்களாக உள்ளான் என்பதை மட்டும் ஏன் ஆக்ஷேபிக்க வேண்டும்? மூலப்ரக்ருதி, பால், தயிர் போன்ற பலவும்

நொடிக்கொரு முறை மாறுபடுதல் என்பது எம்பெருமானின் சக்தியில் ஒரு துளியால் மட்டுமே ஆகும்.

## 178. மஹாத்யுதி:

மிகுந்த ஒளியுடன் கூடியவன். மற்றவர்களின் உதவிகளை எதிர்பார்த்தபடி உள்ள காரணங்களைக் காட்டிலும் இவன் வேறுபட்டவன் என்பதும், யாருடைய உதவியையும் எதற்கும் எதிர்பாராதவன் என்பதும் இந்தத் திருநாமம் மூலம் உணர்த்தப்பட்டது. இந்த ஒளியானது உள்ளும்புறமும் இருக்கின்ற இருவிதமான இருளையும் நீக்கவல்லதாகும். இந்த ஒளியானது அவனை அண்டும் அடியார்களுக்கு இனிமையாகவும், அவனது விரோதிகளுக்குப் பயத்தை அளிப்பதாகவும் உள்ளது. சூரியன், மாணிக்கக்கல் போன்றவற்றில் காணப்படும் ஒளி என்பது இவனது ஒளியில் ஒரு சிறு பகுதி மட்டுமே ஆகும்.

திருநாமங்கள் 173 முதல் 178 முடிய உள்ள ஆறு திருநாமங்களில் "மஹா" என்ற விசேஷமான அடைமொழி உள்ளது காண்க. இதன் மூலம் உணர்த்தப்படுவது என்ன? எப்பெருமானின் இந்தக் குணங்கள் அனைத்தும் தங்களது சிறிய பகுதி மூலம் மட்டுமே எத்தனை பெரிய செயல்களாக இருந்தாலும், எத்தனை அற்பமான செயலாக இருந்தாலும் முடிக்கவல்லவை ஆகும்; இவ்விதம் எளிதாகச் செய்து முடித்த பின்னர், தங்களது திறமைக்கு ஏற்ப மேலும் செயல்கள் ஏதும் இல்லாத காரணத்தால் அவை த்ருப்தி அடையாமல் இருக்கின்றன - என்பதை உணர்த்துகின்றன. மேலும் பெரிய கடல் ஒன்றில் பெரிய நதிகள் உள்ளது போன்று, எல்லையற்ற குணங்கள் கொண்ட எம்பெருமானிடம் இந்தக் குணங்களும் உள்ளன என்பதும் உணர்த்தப்பட்டது. இப்படியாக எம்பெருமானிடம் குணங்கள் உள்ளன என்பது பல ப்ரமாணங்களில் கீழே உள்ளபடி காணப்படுகின்றன:

- ச்வேதாச்வதர உபநிஷத் (6-8) - பரா அஸ்ய சக்தி: விவிதைவ ச்ரூயதே ஸ்வாபாவிகீ ஞாந பல க்ரியா ச – இவனுடைய சக்தி என்பது உயர்ந்தும், பல விதமாகவும் காணப்படுகிறது; இவை இவனுக்கு இயற்கையாகவே உள்ளது. இப்படியாகவே இவனுக்கு ஞானம், பலம், ஸ்ருஷ்டிக்கும் திறன் போன்ற பலவும் உள்ளன.

- விஷ்ணுபுராணம் (6-5-85) - தேஜோ பல ஐச்வர்ய மஹாவபோத ஸுவீர்ய சக்தியாதி குணைகராசி: - தேஜஸ், பலம், ஐச்வர்யம், ஞானம், வீர்யம் மற்றும் சக்தி ஆகிய பலவற்றுக்கும் இவனே இருப்பிடம் ஆவான்.

- விஷ்ணுபுராணம் (6-5-79) – ஞான சக்தி பல ஐச்வர்ய வீர்ய தேஜாம்ஸி அசேஷத: பகவச்சப்த வாச்யாநி விநா ஹேயை: குணாதிபி: – தாழ்வான குணங்கள் என்பதற்கு எதிர்த்தட்டாகவும்; பூரணமாக உள்ள ஞானம், பலம், சக்தி, ஐச்வர்யம், வீர்யம், தேஜஸ் என்பதாகவும் உள்ள குணங்களே பகவான் என்ற பதம் மூலம் உணர்த்தப்படுகின்றன.

பகவத் சாஸ்த்ரம் என்பவை அனைத்தும் பகவானுக்கு இந்த ஆறு குணங்களும் பரிபூர்ணமாக உள்ளன என்பதை உணர்த்துவதை மட்டுமே தங்கள் நோக்கமாகக் கொண்டுள்ளன. சௌசீல்யம் போன்ற குணங்கள், இந்த அடிப்படையான ஆறு குணங்களுக்குள்ளேயே உள்ளவை என்று ஓர் அடிப்படையாகக் கூறப்படுகின்றன.

## 179. அநிர்தேச்ய வபு: (662)

"இப்படிப்பட்டது" என்று வர்ணிக்க இயலாதபடியான திருமேனி கொண்டவன். ஆறு குணங்களுடன் கூடியதாக இவன் திருமேனி உள்ளதால் இந்தத் திருநாமம் கொண்டான். மௌல ஸம்ஹிதை - ஷாட்குண்ய விக்ரஹம் தேவம் பாஸ்வஜ் ஜ்வலந தேஜஸம் – ஆறு குணங்களுடன் கூடிய திருமேனி, கொழுந்து விட்டு எரியும் அக்னி போன்ற தேஜஸ் ஆகியவற்றுடன் எம்பெருமான் உள்ளான் - என்றது. இதனை மேலும் – புத்தி மந: அங்க ப்ரயங்கவத்தாம் பகவதி லக்ஷயாமஹே சாஸ்த்ர சப்தேப்யோ புத்திமாந் அங்க ப்ரத்யங்கவாந் - எம்பெருமானிடம் சிறந்த புத்தி, உயர்ந்த மனம், உன்னதமான சரீரம் நேர்த்தியான அங்கங்கள் ஆகியவை உள்ளன என்று சாஸ்த்ரங்களின் இருந்து அறிகிறோம்; ஆகவே எம்பெருமான் புத்திமான், மனம் கொண்டவன், சரீரம் கொண்டவன் மற்றும் அங்கங்களுடன் கூடியவன் என்று அறிகிறோம் - என்றது காண்க.

நிருக்தம் – யே புத்தி மநோ அங்கப்ரத்யங்கவந்தோ பவந்தி ஸாப்தமஹாபௌதிகாஸ்தே பவந்தி - யார் ஒருவர் புத்தி, மனம், அங்கங்களுடன் கூடியவர்களாக உள்ளனரோ அவர்கள் ஏழு மஹாபூதங்களால் ஆனவர்கள் ஆவர் – என்றது. அப்படி எனில் எம்பெருமானின் சரீரம் எதனால் ஆனது என்ற கேள்வி எழலாம். இந்தக் கேள்வியை எழுப்பி அதற்குப் பின்வருமாறு பதில் அளிக்கப்படுகிறது:

பகவதாத்மிகைவ ஏஷா பகவதோ வ்யக்தி:
யதாத்மகோ ஹி பகவாந் ததாத்மி கைவைஷா
கிமாத்மகச்ச பகவாந்?
ஞானாத்மக: ஐச்வர்யாத்மக: சக்த்யாத்மக:
யதா அங்கார: காதிர: சால்பலோ வா ஸுப்ரதீப்த:
ஸர்வதோ அக்நிரேவ ஸ்யாத் யதா வா மது
மாத்ரம் ப்ரபீயமாநம் ஸர்வதோ மதுரமேவ ஸ்யாத்
யதா வா ஸர்வணாபிண்டோ நித்ருஷ்யமாண:
ஸர்வத: ஸுவர்ணமேவ ஸ்யாத் ஏவம் பகவாந்
ஸர்வதோ ஞானமேவ: ஸர்வத: ஐச்வர்யமேவ:
ஸர்வத: சக்திரேவ: யதிச்சேத் தத்பவேத்

இதன் பொருள் – எம்பெருமானின் சரீரம் பகவத் ரூபமாகவே உள்ளது. அவன் எந்த ரூபமாக உள்ளானோ அவன் சரீரம் அந்த ரூபமாகவே உள்ளது. அவன் எந்த ரூபமாக உள்ளான்? ஞானரூபன், ஐச்வர்யரூபன், சக்திரூபன் என உள்ளான். இது எப்படி சாத்தியம்? காதிரம், சால்மலி என்று எந்த மரம் தீப்பிடித்தாலும் ஒரே அக்னியே உண்டாகிறது; தேனைப் பருகும்போது அதன் அனைத்துப் பகுதிகளும் ஒரே போன்று இனிமையாகவே உள்ளன; தங்கத்தை உரைத்துப் பார்த்தால் அதன் பல்வேறு பாகங்களில் இருந்து வரும் தங்கம் ஒரே தங்கமாகவே உள்ளது; ஓர் அரண்மனை எந்தத் திக்கிலிருந்து பார்க்கப்பட்டாலும் ஒரே போன்று அழகுடன் கூடியதாகவே உள்ளது. இது போன்று எம்பெருமான் முற்றிலுமாக ஞானமயம், முற்றிலுமாக ஐச்வர்யமயம், முற்றிலுமாக சக்திமயம் என்று எவ்விதம் தான் விரும்புகிறனோ அப்படியே உள்ளான்.

இதனையே பஞ்சோபநிஷத் – சுத்த ஸத்வமயேந ஹி அநேந கநகதலேந இவ ரத்நம் உந்மீல்யதே ஷட்குணீ ச து த்ரிகுணமயேந இவ நிமீல்யதே – ஒளி வீசும் இரத்தினத்தைத் தங்கத்தில் வைத்து இழைக்கும்போது அது மேலும் ஒளிர்கிறது; அது போன்று ஆறு குணங்கள் கொண்ட எம்பெருமான் தனது சுத்தஸத்வமயமான ரூபம் மூலம் மேலும் ப்ரகாசம் கொண்டவனாக உள்ளான் – என்றது. விஷ்ணுபுராணம் (1-2-10) – ரூபவர்ணாதி நிர்தேச விசேஷண விவர்ஜித: - தனது ரூபம் மற்றும் வர்ணம் ஆகியவற்றால் எம்பெருமான் ஒப்பில்லாதவனாக உள்ளான் - என்றது. நிர்தேச விசேஷணம் = உபமானமாகக் கூறப்படும் பொருள், தத்வர்ஜித: = அப்படி தனக்கு உபமானமாக ஏதும் இல்லாதவன். அதாவது ஒப்பற்ற சரீரம் உடையவன்.

## 180. ஸ்ரீமாந் (22, 222)

தனது திருமேனிக்கு ஏற்றதான திவ்யமான ஆபரணங்களின் ஐச்வர்யத்துடன் கூடியவன்.

## 181. அமேயாத்மா (103)

இப்படியாக உள்ள குணங்கள் மற்றும் ரூபங்கள் ஆகியவற்றுக்கு ஏற்றபடி ஆழமான ஸமுத்திரம் போன்று கம்பீரமாக உள்ளவன்.

## 182. மஹாத்ரித்ருத்

மிகப் பெரிய மலையைத் தாங்கியவன். இதுவரை கூறப்பட்ட அளவிட இயலாத தன்மைகளுக்கு ஏற்றபடியாக, தனது விருப்பப்படி பலவிதமான லீலைகள் செய்பவன். திருப்பாற்கடலைக் கடைந்தபோது மந்தர மலையைத் தாங்கி நின்றவன்.

## 183. மஹேஷ்வாஸ:

வலிமையான அம்புகளைத் தொடுப்பவன். கீழே கூறியபடியான, மனம் கவரும்படியாக அம்புகளை எய்பவன், இலங்கைக்குச் சென்று பத்துத் தலைகளுடன் கூடிய இராவணனை அழிப்பதற்காக வருணனைக் கட்டி நிறுத்தி, அம்புகள் எய்து பாலம் கட்ட முனைந்தபோது இந்த கம்பீரம் காணலாம்.

அழகியமணவாளன் திருவடிகளே சரணம்
ஸ்வாமி பராசரபட்டர் திருவடிகளே தஞ்சம்

...தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

பகவத் ராமானுஜர் அருளிச் செய்த

# ஸ்ரீபாஷ்யம்

(பகுதி – 63)

## அதிகரணம் – 10 – நிசாதிகரணம்

**ஆராயப்படும் விஷயம்** - இரவில் மரணம் அடையும் ப்ரஹ்மஞானி, ப்ரஹ்மத்தை அடைவான் என்பது நிரூபிக்கப்பட உள்ளது.

4-2-10 நிசி நேதி சேத் ந ஸம்பந்தஸ்ய யாவத்தேஹ பாவித்வாத் தர்சயதி ச

**பொருள்** - இரவில் மரணம் அடைந்தவனுக்கு மோக்ஷம் இல்லை என்பது சரியல்ல. கர்மத்தின் சம்பந்தம் என்பது சரீரம் உள்ளவரை மட்டுமே என்பதால்; இதனை வேதமும் கூறுகிறது.

**விஷயம்** - இரவில் மரணம் அடைந்த ப்ரஹ்மஞானி ப்ரஹ்மத்தை அடைகிறானா இல்லையா என்ற சந்தேகம் எழுகிறது.

**பூர்வபக்ஷம்** – இரவில் சூரியனின் கிரணங்கள் உண்டு என்பதும், அதன் மூலம் இரவிலும் ஏறிச் செல்ல இயலும் என்பதும் நீங்கள் கூறியபடி நம்மால் ஏற்கப்படுகிறது. ஆயினும் இரவு நேரத்தில் உண்டாகும் மரணம் பற்றி சாஸ்த்ரங்கள் தாழ்த்தியே கூறுகின்றன. ஆகவே இரவில் மரணம் அடையும் ப்ரஹ்மஞானிக்கு மிகவும் உயர்ந்த புருஷார்த்தமாகக் கொள்ளப்படும் ப்ரஹ்மப்ராப்தி என்பது இல்லை. சாஸ்திரங்களில் – திவா ச சுக்லபக்ஷ: ச உத்தராயணமேவ ச முமூர்ஷதாம் ப்ரசஸ்தாநி விபரீதம் து கர்ஹிதம் – மரணம் அடைபவர்களுக்கு பகல்பொழுது, சுக்லபக்ஷம் மற்றும் உத்தராயணம் ஆகியவை உயர்ந்த கதியை அளிப்பதால் அவை சிறந்தவை; இதற்கு மாறாக உள்ள இரவுப்பொழுது, க்ருஷ்ண பக்ஷம் மற்றும் தக்ஷிணாயனம் ஆகியவை தாழ்ந்தவை -

என்று கூறப்பட்டது. இதன் மூலம் பகலில் உண்டாகும் மரணம் என்பது சிறப்பாகவும், இரவில் நிகழும் மரணம் என்பது நிந்திக்கப்படுவதாகவும் உணர்ந்தப்பட்டது. அதாவது பகல்பொழுதில் மரணம் அடைந்தால் அந்தப் பொழுது ஒருவனுக்கு நல்ல கதியை அளிப்பதற்குக் காரணமாக உள்ளது. இதே போன்று இரவுப்பொழுதில் இறக்கும்போது அந்தப் பொழுது தாழ்ந்த கதிக்குக் காரணமாகிறது. ஆகவே இரவில் மரணம் அடைந்தால் ப்ரஹ்மப்ராப்தி இல்லை என்றாகிறது.

**ஸித்தாந்தம் -** அப்படி அல்ல. மோக்ஷம் அடைகின்ற ப்ரஹ்மஞானிக்குத் தனது சரீரத்தை கைவிடும் காலம்வரை கர்மத்தின் தொடர்பு உள்ளதால் ஆகும். இங்கு கூறப்படுவது என்ன? கர்மங்களே தாழ்ந்த கதிக்கு இட்டுச் செல்கின்றன. ப்ரஹ்மஞானியின் ப்ராரப்த கர்மங்கள் (பலன் தரத் தொடங்கியவை) அனைத்தும் சரீரம் நீங்கும்போது விலகுகின்றன. பலன் அளிக்கத் தொடங்காத கர்மங்கள் அனைத்தும் வித்யையின் மேன்மையால் அழிந்து விடுகின்றன. வித்யைக்குப் பின்னர் செயல்படும் கர்மங்களின் பலனும் ஒட்டாமல் போகின்றன. ஆக எந்தவகையிலும் ஸம்ஸாரபந்தம் என்பது ப்ரஹ்மஞானிக்கு இல்லாமல் போய்விடுவதால், ப்ரஹ்மஞானிக்கு இரவில் மரணம் ஏற்பட்டாலும் ப்ரஹ்மப்ராப்தி உண்டாகியே தீரும். இதனை சாந்தோக்ய உபநிஷத் (6-14-2) – தஸ்ய தாவதேவ சிரம் யாவந்ந விமோக்ஷ்யே அத ஸம்பத்ஸ்யே – ப்ரஹ்மஞானிக்குத் தனது சரீரத்தை விடும் காலம்வரை மட்டுமே தாமதம் ஆகிறது; சரீரத்தை விட்டவுடன் ப்ரஹ்மப்ராப்தி ஏற்படுகிறது - என்றது காண்க. ஆகவே முன்னர் எடுக்கப்பட்ட – திவா ச சுக்லபக்ஷ ச – என்ற வரியானது ப்ரஹ்மஞானி அல்லாதவர்களுக்கே ஆகும்.

நிசாதிகரணம் ஸம்பூர்ணம்

## அதிகரணம் -11 - தக்ஷிணாயநாதிகரணம்

**ஆராயப்படும் விஷயம்** - ப்ரஹ்மஞானி தக்ஷிணாயனத்தில் மரணம் அடைந்தாலும் ப்ரஹ்மப்ராப்தி உண்டு என்று நிரூபிக்கப்பட உள்ளது.

4-2-19 அத: ச அயநே அபி தக்ஷிணே

**பொருள் –** தக்ஷிணாயனத்திலும் அது போன்றே.

**விஷயம் –** கடந்த அதிகரணத்தில் இரவில் மரணம் அடைகின்ற ப்ரஹ்ம உபாஸகனுக்கும் ப்ரஹ்மப்ராப்தி உண்டு என்பது கூறப்பட்டது. இது எந்தக் காரணத்தால் கூறப்பட்டதோ, அதே காரணத்தினால் ப்ரஹ்மஞானி தக்ஷிணாயன காலத்தில் மரணம் அடைந்தாலும் ப்ரஹ்மப்ராப்தி உண்டு என்பது இங்கு கூறப்பட்ட உள்ளது.

**சந்தேகம் –** (பூர்வபக்ஷி எழுப்புவது) மஹாநாராயண உபநிஷத்தில் (25-1) – அதயோ தக்ஷிணே ப்ரமீயதே பித்ருணாமேவ மஹிமாநம் கத்வா சந்த்ரமஸஸ் ஸாயுஜ்யம் கச்சதி - ப்ரஹ்மவித்யை நிஷ்டர்கள் தக்ஷிணாயனத்தில் மரணம் அடைந்தால், சந்த்ர மண்டலம் சென்று, பித்ருக்களின் மஹிமையை அடைகிறான் - என்று உள்ளது. இதன் மூலம் தக்ஷிணாயனத்தில் மரணம் அடைந்தவனுக்கு சந்த்ர ப்ராப்தி மட்டுமே கூறப்பட்டது. மேலும் சந்த்ரனை அடைந்தவர்களுக்குத் திரும்பி வருதல் என்பது கீழே உள்ள வரிகளில் கூறப்பட்டுள்ளது:

- ப்ருஹத் உபநிஷத் (6-2-16) – யதா தத்பர்யவௌதி – அது முடிந்த பின்னர்.
- சாந்தோக்ய உபநிஷத் (5-10-5) – அத ஏதமேவ அத்வாநம் புநர் நிவர்த்தந்தே – ஸம்ஸார மண்டலத்திற்கே திரும்புகின்றனர்.

மேலும் ப்ரஹ்மவித்யை நிஷ்டர்களான பீஷ்மர் முதலான பலரும் உத்தராயண காலத்திற்காகக் காத்திருந்ததை நோக்குக. இது போன்ற பல காரணங்களால் ப்ரஹ்மஞானிக்குத் தக்ஷிணாயன காலத்தில் மரணம் ஏற்பட்டால் ப்ரஹ்மப்ராப்தி இல்லை என்றாகிறது.

**ஸித்தாந்தம் –** இது தவறு. பித்ருயாண மார்க்கம் மூலம் சந்த்ரனை அடைந்து திரும்புதல் என்பது ப்ரஹ்மஞானி அல்லாதவர்களுக்கு மட்டுமே ஆகும். ப்ரஹ்மஞானி ஒருவன் தக்ஷிணாயனத்தில் மரணம் அடைந்து சந்த்ர மண்டலத்தை அடைந்தாலும், ப்ரஹ்மப்ராப்தி பெறப்போகும் அவனுக்கு, சந்த்ரமண்டலத்தை அடைதல் என்பது ஓய்வு எடுப்பதற்காக மட்டுமே ஆகும். இதனை மஹாநாராயண உபநிஷத்தில் (24-2, 25-1) - தஸ்மாத் ப்ரஹ்மணோ மஹிமாநம் ஆப்நோதி – அவன் ஆகவே ப்ரஹ்மத்தை அடைகிறான் - என்றது காண்க.

மேலே கூறப்பட்டபடி வாக்கியத்தின் முடிவுப்பகுதி இல்லாமல் போனாலும் (ப்ரஹ்மத்தை அடைதல் என்பது கூறாமல் விடப்பட்டிருந்தாலும்), கடந்த அதிகரணத்தில் கூறியபடி கர்மபந்தம் என்பது இருக்காது; இந்தக் காரணத்தினாலும் ப்ரஹ்மஞானி சந்த்ரமண்டலம் சென்றாலும், ஸம்ஸாரபந்தம் இல்லாமையால், ப்ரஹ்மத்தை அடைவதைத் தடுக்க இயலாது. பீஷ்மர் போன்றவர்கள் தங்கள் யோகத்தின் மேன்மை காரணமாக, தாங்கள் விரும்பும் நேரத்தில் மரணம் அடையும் வரம் பெற்றிருந்தனர். ஆயினும் பீஷ்மர் ஏன் உத்தராயணத்திற்காகக் காத்திருந்தார் என்றால், உத்தராயணத்தின்போது மரணம் அடைவதற்குத் தனி மேன்மை உண்டு என்று உணர்த்தவே ஆகும்.

**பூர்வபக்ஷம் -** ஞானியாக உள்ளவன் மரணம் அடையும் நேரத்தைக் கூறும்போது, இன்ன காலத்தில் மரணம் அடைந்தால் மீண்டும் திரும்புதல் இல்லை என்று கீதையில் கீழே உள்ள வரிகளில் கூறப்பட்டது. இது எப்படி?

- (8-23) - யத்ர காலே த்வநாவ்ருத்திம் ஆவ்ருத்திம் சைவ யோகிந:, ப்ரயாதா யாந்தி தம் காலம் வக்ஷ்யாமி பரதர்ஷப - அர்ஜுனா! யோகி ஒருவன் எந்தெந்த காலத்தில் மரணம் அடைந்தால் மீண்டும் திரும்புதல் என்பது இல்லையோ, எந்தெந்த காலத்தில் மரணம் அடைந்தால் மீண்டும் திரும்புவானோ, அவற்றைப் பற்றி நான் கூறுகிறேன்.

- (8-24) – அக்நிர் ஜ்யோதிரஹச்சுக்ல: ஷண்மாஸா உத்தராயணம் தத்ர ப்ரயாதா கச்சந்தி ப்ரஹ்ம ப்ரஹ்மவிதோ ஜநா: - நெருப்பு போன்று ஒளிர்கின்ற பகல், சுக்லபக்ஷம், உத்தராயணம் என்னும் ஆறு மாதங்கள்

ஆகியவற்றில் மரணம் அடையும் ப்ரஹ்மஞானிகள் ப்ரஹ்மத்தை அடைகின்றனர்.

- (8-25) - தூமோ ராத்ரி: ததா க்ருஷ்ண: ஷண்மாஸா தக்ஷிணாயநம் தத்ர சந்த்ரமஸம் ஜ்யோதி: யோகீ ப்ராப்ய நிவர்த்ததே - புகை போன்ற இரவு, க்ருஷ்ண பக்ஷம், தக்ஷிணாயனம் என்னும் ஆறு மாதங்கள் ஆகியவற்றில் மரணம் அடைகின்ற ப்ரஹ்மஞானி சந்த்ரனை அடைந்து மீண்டும் திரும்புகிறான்.

- (8-26) சுக்ல க்ருஷ்ணே கதீ ஹ்யேதே ஜகதச்சாச்வதே மதே ஏகயா யாத்ய நாவ்ருத்திம் அந்யயா ஆவர்த்ததே புந: - சுக்லபக்ஷம், க்ருஷ்ணபக்ஷம் என்ற இரண்டும் உபநிஷத்துக்களில் கூறப்பட்டவை. இவற்றில் சுக்லபக்ஷத்தில் மரித்தவன் மீண்டும் திரும்பமாட்டான், க்ருஷ்ணபக்ஷத்தில் மரித்தவன் மீண்டும் திரும்புவான்.

ஆக, தக்ஷிணாயனம் என்பதில் மரணம் அடைந்தால் ப்ரஹ்மப்ராப்தி இல்லை என்றாகிறது (இதற்கான விடை அடுத்த சூத்திரத்தில் உள்ளது).

4-2-20 யோகிந: ப்ரதி ஸ்மர்யேதே ஸ்மார்த்தே சைதே

**பொருள்** - இவை யோகிகள் குறித்து ஸ்ம்ருதியில் ஓதப்பட்ட தேவயான மற்றும் பித்ருயான மார்க்கங்கள் பற்றி உணர்த்தவே கூறப்பட்டன.

**ஸித்தாந்தம்** – (கடந்த சூத்திரத்தின் இறுதியில் உள்ள பூர்வபக்ஷத்திற்கு உரியது) இந்த ஸ்ம்ருதியானது மரணம் அடைபவர்களின் மரணகாலத்திற்கு உரிய விசேஷங்களைக் கூறவில்லை. மாறாக இந்த வரிகள் யோக நிஷ்டர்கள் குறித்து, ஸ்ம்ருதி விஷயமான தேவயான மற்றும் பித்ருயான மார்க்கங்கள் குறித்துக் கூறப்பட்டன. அவைகளை அவர்கள் அன்றாடம் எண்ணியபடி இருக்கவேண்டும் என்பதற்காகக் கூறப்பட்டன. இதனை க்ருஷ்ணன் அந்த வரிகளை முடிக்கும்போது கூறுகிறான் (8-26) – நைதே ஸ்ருதீ பார்த்தஜாநந் யோகீ முஹ்யதி கச்சந தஸ்மாத் ஸர்வேஷு காலேஷு யோகயுக்தோ பவார்ஜுந - அர்ஜுனா! இத்தகைய இரண்டு வழிகளை நன்கு அறிந்த யோகி ஒருவன் இதற்காக மயங்கமாட்டான்; ஆகவே அன்றாடம் நீ அர்ச்சிராதி மார்க்கத்தை எண்ணுபவனாக இருப்பாயாக - என்றான்.

கீதையில் உள்ள (8-24) - அக்நிர் ஜ்யோதி:, (8-25) - தூமோ ராத்ரி: என்பவை முறையே தேவயானம் மற்றும் பித்ருயானம் ஆகிய மார்க்கங்களையே குறிப்பதாக உள்ளன. மேலும் (8-23) – யத்ர காலேது – என்பதில் உள்ள “கால” என்ற பதமானது காலத்தின் அபிமான தேவதையான ஆதிவாஹிகர்களைக் கூறுகிறது. அக்னி என்பது காலங்கள் அல்ல என்பதால் இவ்விதமே பொருள் கொள்ளவேண்டும். ஆகவே ப்ருஹத் உபநிஷத் (6-2-15) – தே அர்ச்சிஷம் அபிஸம்பவந்தி – அவர்கள் அர்ச்சிராதியில் செல்கின்றனர் - என்பதன் மூலம் ப்ரஹ்மஞானிகள் தாங்கள் செல்ல உள்ள அர்ச்சிராதி மார்க்கத்தை எண்ணியபடி இருக்கவேண்டும் என்பது உணர்த்தப்பட்டது. இங்கு, குறிப்பிட்ட காலத்தில் மரணம் அடைந்தால் என்ன விசேஷம் என்பது பற்றி ஏதும் கூறப்பட்டவில்லை, என்பதை உணரவேண்டும்.

தக்ஷிணாயனாதிகரணம் ஸம்பூர்ணம்

ஸ்ரீபாஷ்யம் நான்காம் அத்யாயம் இரண்டாம் பாதம் ஸம்பூர்ணம்

தென்னரங்கன் திருவடிகளே சரணம்
தென்னரங்கன் செல்வம் முற்றும் திருத்தி வைத்த இராமாநுசன்
திருவடிகளே சரணம்

... தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீவேதாந்த மஹாதேசிகன் அருளிச் செய்த

# ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம்

(பகுதி – 63)

**மூலம்** – இவ்வாஜ்ஞாதிலங்கனம் ப்ரஹர்ஷயிஷ்யாமி என்று உத்தேச்யையான பகவத் ப்ரீதிக்கு விரோதியானபடியாலே இச்சாஸ்த்ரீய நியமம் ரஹஸ்ய த்ரயத்தில் விரோதி நிவ்ருத்தியை அநுஸந்திக்குமிடங்களிலே அநுஸந்திக்கப் ப்ராப்தம்.

**விளக்கம்** – எம்பெருமானின் கட்டளைகளை மீறுதல் என்பது, நம்முடைய இலக்காக உள்ள "எம்பெருமானின் மகிழ்ச்சிக்காகவே நாம் உள்ளோம்" என்பதற்கு விரோதியாகவே உள்ளது. நாம் அவனது மகிழ்விற்காகவே உள்ளோம் என்பதை ஸ்தோத்ர ரத்னம் (46) – ப்ரஹர்ஷயிஷ்யாமி – எப்போது உன்னை மகிழச் செய்வேன் – என்பதில் காணலாம். ஆகவே சாஸ்த்ரங்களில் உள்ளவற்றைப் பின்பற்றுதல் என்பதை, மூன்று ரஹஸ்யங்களிலும் (திருமந்த்ரம், த்வயம், சரம ச்லோகம்) உள்ள விரோதி நீக்கம் பற்றிக் கூறும் இடங்களில் கண்டு கொள்க.

**மூலம்** – இந்த நியமாநுவர்த்தனம் பூர்ணோபாயரல்லாத அதிகாரிகளுக்கு உபாய பூர்த்தி விரோதியை சமிப்பித்துக் கொண்டு பகவத்ப்ரஸாதநமாய் இருக்கும். பூர்ணோபாயருக்கு அதிலங்கனஹேதுக அப்ரீதி பிறவாதபடி பண்ணிக்கொண்டு பகவத்ப்ரீணநமாயிருக்கும்.

**விளக்கம்** – ஒரு சிலர் ப்ரபத்தி என்ற உபாயத்தைக் கைக்கொள்ளாமல் இருக்கக்கூடும். அப்படிப்பட்டவர்கள் சாஸ்த்ரங்களால் விதிக்கப்பட்டதைக் கைக்கொண்டால், அதுவே அவர்களது ப்ரபத்தி உபாயத்திற்குத் தடையாக உள்ள விரோதிகளை நீக்கி, எம்பெருமானின் கருணையையும் சம்பாதித்துக் கொடுக்கும். ஒரு சிலர் ப்ரபத்தி என்ற உபாயத்தைக் கைக்கொண்டிருக்கக்கூடும். அப்படிப்பட்டவர்கள் சாஸ்த்ரங்களால் விதிக்கப்பட்டதை மீறாமல் இருந்தால், அதுவே எம்பெருமானுக்கு "சாஸ்த்ரங்களை மீறுவதால் உண்டாகும் மகிழ்ச்சியின்மை" என்பது உண்டாகாதபடி தடுத்து, எம்பெருமானின் மகிழ்வையும் சம்பாதித்துக் கொடுக்கும்.

**மூலம் –**

ஆஜ்ஞா அநுஜ்ஞா விபாகேந த்விதா சாஸ்த்ரீய புத்தி:
நிக்ரஹ அநுதயாய ஆத்யா பரா தத்தத் பல ஆப்தயே

அநுஜ்ஞயா ப்ரவ்ருத்தே அபி க்ரம கோப ஆதி ஸம்பவே
ஆஜ்ஞா அதிக்ரம தோஷ: ஸ்யாத் நியம: அத: துரத்யய:

ப்ரத்யவாய பரீஹாரே பலாந்தர ஸமந்விதே
தத்ர ஸம்வலிதம் ப்ராஹு: அதிகாரம் விசக்ஷணா:

நித்ய காம்ய ஸ்வரூப ஐக்யே விநியோக ப்ருதக்த்வத:
பலார்த்தம் க்ரியமாணே அபி நித்யம் பவதி தந்த்ரத:

அநுஜ்ஞா மாத்ர ஸித்தேஷு கைங்கர்யேஷு விசக்ஷணை:
அக்ருதௌ தத் பல அலாப: ந து தோஷ இதி ஈரிதம்

**விளக்கம் –**

- ஆஜ்ஞா அநுஜ்ஞா விபாகேந த்விதா சாஸ்த்ரீய புத்தி: நிக்ரஹ அநுதயாய ஆத்யா பரா தத்தத் பல ஆப்தயே – சாஸ்த்ரங்களில் கூறப்பட்ட விதிமுறைகள் ஆஜ்ஞை (செய்தே தீர வேண்டும்) மற்றும் அநுஜ்ஞை (செய்தால் நலம் விளையும்) என்று இருவகைப்படும். ஆஜ்ஞை என்பது எம்பெருமானின் தண்டனையில் இருந்து தப்புவதற்கும், அநுஜ்ஞை என்பது அந்தந்த பலனைப் பெருவதற்கும் வழி வகுக்கும்.

- அநுஜ்ஞயா ப்ரவ்ருத்தே அபி க்ரம கோப ஆதி ஸம்பவே ஆஜ்ஞா அதிக்ரம தோஷ: ஸ்யாத் நியம: அத: துரத்யய: - அநுஜ்ஞை விதியால் தொடங்கப்பட்ட கைங்கர்யம் என்றபோதும், அதில் ஏதேனும் முறை தவறுதல் போன்ற குற்றங்கள் உண்டானால், ஆஜ்ஞையை மீறினால் எந்தவிதமான தோஷம் உண்டாகுமோ, அதுவே உண்டாகும். ஆகவே சாஸ்த்ரங்களில் கூறப்பட்ட கட்டுப்பாடுகள் மீற இயலாதவை ஆகும்.

- ப்ரத்யவாய பரீஹாரே பலாந்தர ஸமந்விதே தத்ர ஸம்வலிதம் ப்ராஹு: அதிகாரம் விசக்ஷணா: - ஒரே கர்மம் சாஸ்த்ரங்களில் கூறப்பட்ட விதிகளை

மீறாமல் இருப்பதற்கும், மற்ற பலன்களை அடைவதற்கும் என்று இருக்கலாம். இதில் அதிகாரம் சேர்ந்துள்ளதாக பண்டிதர்கள் கூறுகின்றனர்.

- நித்ய காம்ய ஸ்வரூப ஐக்யே விநியோக ப்ருதக்த்வத: பலார்த்தம் க்ரியமாணே அபி நித்யம் பவதி தந்த்ரத: - ஒரே கர்மம் நித்யகர்மமாகவும் (செய்தே ஆகவேண்டும்), காம்ய கர்மமாகவும் (பலனுக்காகச் செய்யப்படுபவை) இருக்கலாம். இப்படி உள்ளபோது பலனுக்காகச் செய்யப்படும் அதே கர்மம், விதிமுறைகளுக்காகவும் செய்யப்படும் கர்மம் என்றும் கொள்ளப்படும்.

- அநுஜ்ஞா மாத்ர ஸித்தேஷு கைங்கர்யேஷு விசக்ஷணை: அக்ருதௌ தத் பல அலாப: ந து தோஷ இதி ஈரிதம் - ஒரு சில குறிப்பிட்ட பலன்களுக்கான கர்மங்களை இயற்றும்போது ஏதேனும் தோஷம் உண்டானால், அந்தப் பலன்கள் கிட்டாமல் போகும். இதனால் சாஸ்த்ரங்களை மீறுதல் என்னும் தோஷம் உண்டாவதில்லை என பண்டிதர்கள் கூறுகின்றனர்.

நின்றனம் அன்புடை வானோர் நிலையில் நிலமளந்தான்
நன்றிது தீயதிதென்று நடத்திய நான்மறையால்
இன்று நமக்கிரவாதலில் இம்மதியின் நிலவே
அன்றி, அடிக்கடி ஆரிருள் தீர்க்க அடியுளதே.

**பொருள்** – த்ரிவிக்ரமனாக நின்று உலகம் அனைத்தையும் அளந்த ஸர்வேச்வரனால் "இந்தக் கர்மம் செய்யக்கூடியது, இந்தக் கர்மம் செய்யக்கூடாதது" என்று சாஸ்த்ரங்கள் மூலமாக நமக்கு உணர்த்துகிறான். இவ்விதம் வேதங்களால் காண்பிக்கப்பட்ட வழிமுறைகளில் நாம் நடப்பதன் மூலம் கிட்டுவது என்னவென்றால் எம்பெருமானிடம் பூர்ணமான ப்ரேமை கொண்ட நித்யஸூரிகளுக்கு ஒத்த கைங்கர்ய நிலை நமக்கும் கிட்டுகிறது. ஸம்ஸாரம் என்னும் இருளில் வாழ்கின்ற நம்மை, மீண்டும் மீண்டும் அஜ்ஞானம் என்னும் இருள் சூழ்ந்தபடியே உள்ளது. இதனைப் போக்க வேதங்களாகிய சந்த்ரனின் ப்ரகாசம் போன்ற ஸ்ம்ருதியைக் காட்டிலும் வேறு உபாயம் உள்ளதோ?

ச்ருதி ஸ்ம்ருதி ஆசாரை: ஸ்வமதி பதிபி: சுத்தமநஸாம்
ஸுஸங்கல்பை: தர்ம்யை: குல சரண தேசாதி ஸமயை:
நியோகை: யோக்யாநாம் நியமயிது: ஆதே: அபிமதம்
நிமித்த ஸ்வப்நாத்யை: நிபுணம் அந்திச்சதி புத:

**பொருள்** – வித்வானாக உள்ளவன் செய்வது என்ன? வேதங்கள், ஸ்ம்ருதிகள், ஆசாரங்கள், தன்னுடைய புத்தி, தூயவர்களின் ஸங்கல்பம், தர்மங்களின் வழியில் இருந்து மாறுபடாமல் உள்ள குலம்-சாகை-தேசம் போன்ற கட்டுப்பாடுகள், பெரியவர்களின் ஆணைகள், சகுனங்கள் மற்றும் கனவுகள் போன்ற பலவற்றால் இந்த உலகத்தை அடக்கி ஆள்பவனும், அனைத்திற்கும் காரணமானவனும் ஆகிய ஸர்வேச்வரனின் திருவுள்ளத்தை நன்கு அறிந்து கொள்கிறான்.

சாஸ்த்ரீயநியமநாதிகாரம் ஸம்பூர்ணம்

தூப்புல் பிள்ளை திருவடிகளே சரணம்

... தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீரங்கநாச்சியார் ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்வாமி பிள்ளை லோகாசார்யர் அருளிச் செய்த

# ஸ்ரீவசனபூஷணம்

இதற்கு ஸ்வாமி மணவாள மாமுனிகள் அருளிச் செய்த வ்யாக்யானம்
(பகுதி – 19)

23. ப்ரபத்திக்கு தேசநியமமும் காலநியமமும் ப்ரகாரநியமும் அதிகாரிநியமமும் பலநியமமுமில்லை.

**அவதாரிகை** – கீழுக்தமான உபாயத்தினுடைய ஸ்வீகாரரூபையாய் (ப்ரபத்த்யுபதேசம் பண்ணிற்றும்) என்று ப்ராஸங்கிகமாக ப்ரஸ்துதையான ப்ரபத்தியினுடையபடியை விஸ்தரேணவருளிச்செய்கிறது மேல். அதில் ப்ரதமத்தில், அர்ஜுநனுக்கு ப்ரபத்த்யுபதேசம் பண்ணுகிறவளவில் யுத்தபூமியிலே ஒருகால் விசேஷம் பாராமல் ஸ்நாநாதிகளுமின்றிக்கே யிருக்க உபதேசிப்பானென்? இதுக்கு தேசாதி நியமங்களில்லையோ என்கிற சங்கையிலேயருளிச் செய்கிறார் (ப்ரபத்திக்கென்று தொடங்கி).

**விளக்கம் -** உபாயமாக உள்ள ஸர்வேச்வரனை உபாயமாகப் பற்றிக் கொள்ளுதல் என்னும் பொருளை உணர்த்தும்விதமாக "ப்ரபத்தி உபதேசம்" என்று சுருக்கமாக அருளிச் செய்தார். இனி ப்ரபத்தியைப் பற்றியும், அதன் நிலைகள் பற்றியும் விரிவாக அருளிச் செய்கிறார். முதலில் அர்ஜுனனுக்கு உபதேசம் செய்யும்போது, அந்தப் போர்க்களத்தில் நேரம் காலம் பார்க்கவிலை, நீராடுதல் முதலான செயல்களைப் பார்க்கவில்லை, ஆயினும் உபதேசம் செய்தது ஏன்? அப்படியெனில், இந்த ப்ரபத்தி என்பதற்கு இன்ன தேசம், இன்ன காலம் போன்ற கட்டுப்பாடுகள் ஏதும் இல்லையா என்ற சந்தேகம் எழலாம். இதற்கான விடையை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – ப்ரபத்தியாவது பகவச்சரண வரணம். தேசநியமமாவது புண்ய தேசங்களிலே செய்யவேணும், அந்யதேசங்களிலாகாதென்னுமது. காலநியமமாவது வஸந்தாதி காலங்களிலே செய்யவேணும், அந்யகாலங்களிலாகாதென்னுமது. ப்ரகாரநியமமாவது ஸ்நாந பாதப்ரக்ஷாளநாதி பூர்வகமாகச் செய்யவேணும், ப்ரகாராந்தரத்தாலே செய்யவொண்ணாதென்னுமது. அதிகாரி நியமமாவது த்ரை வர்ணிகராக வேணும், அத்ரைவர்ணிகராக வொண்ணாதென்னுமது. பலநியமமாவது த்ருஷ்டாத்ருஷ்ட பலங்களிலின்ன பலத்துக்கிது ஸாதநம், அந்யபலத்துக்கு ஸாதநமன் றென்னுமது. தேசகால ஸாத்குண்ய வைகுண்யங்களடியாக வரும் அதிசயாநதிசயங்களை யுடைத்தாவ தொன்றல்லாமையாலும், தீர்த்தத்திலே யவகா ஹிக்குமளவில் சுத்தாசுத்த விபாகமற அவகாஹிக்கலா யிருக்குமாப்போலே ஸ்வயமேவ பவித்ரமாய சுத்தா சுத்த விபாகமற தன்னோடந்வயிக்கலாம்படி யிருக்கையாலும் வர்ணாத்யநுரூபமாயிருப்பதொன்றன்றிக்கே ஸ்வரூபாநுரூபமாயிருப்பதொன்றா கையாலும், சேதநருடைய ருச்யநு குணமான பல விசேஷங்களுக்கு ஸாதநமாவதொன்றாலும், இந்நியமங்களொன்று மிதுக்கில்லையென்கிறது. ந ஜாதி பேதம் நகுலம் நலிங்கம் நகுணக்ரியா:, ந தேச காலெள நாவஸ்தாம் யோகோ ஹ்யயமபேக்ஷதே; ப்ரஹ்ம க்ஷத்ர விசச் சூத்ரா: ஸ்த்ரியச்சாந்தர ஜாதய: ஸர்வ ஏவ ப்ரபத்யேரந் ஸர்வ தாதாரமச்யுதம் என்று ப்ராபத்திக்கு தேசகால ப்ரகாராதிகாரி நியமாபாவம் பாரத்வாஜ ஸம்ஹிதையிலும் ப்ரபத்தே: க்வசிதப்யேவம் பராபேஷா ந வித்யதே, ஸாஹி ஸர்வத்ர ஸர்வேஷாம் ஸர்வகாம பலப்ரதா என்று பல நியமாபாவம் ஸநத்குமார ஸம்ஹிதையிலும் சொல்லப்பட்டதிறே.

**விளக்கம்** - ப்ரபத்தி என்பது எம்பெருமானையே உபாயம் என்று பற்றுதல் ஆகும். தேச நியமம் என்றால் இந்த ப்ரபத்தியைப் புண்ணியதேசங்களில் மட்டுமே செய்யவேண்டும், மற்ற இடங்களில் செய்யக்கூடாது என்பதாகும். காலநியமம் என்றால் இந்த ப்ரபத்தியை வஸந்த காலத்தில் மட்டுமே செய்யவேண்டும், மற்ற காலங்களில் செய்யக்கூடாது என்பதாகும். ப்ரகார நியமம் என்றால் ப்ரபத்தியை நீராடுதல், கால் கழுவுதல் போன்றவற்றைச் செய்த பின்னரே செய்யவேண்டும், அதற்கு முன்பாக செய்தல் கூடாது என்பதாகும். அதிகாரி நியமம் என்றால் முதல் மூன்று வர்ணத்தினராக மட்டுமே இருக்கவேண்டும், மற்ற வர்ணத்தினராக இருத்தல் கூடாது என்பதாகும். பல நியமம் என்றால் இவ்வுலகப் பலன் மற்றும் அவ்வுலகப் பலன்களில், இன்ன பலத்திற்கு இது சாதனமாக உள்ளது, மற்ற தாழ்ந்த பலன்களுக்கு இது சாதனம் அல்ல என்பதாகும். தேசங்களின் உயர்வு மற்றும் தாழ்வுகளின் அடிப்படையிலும், காலம் என்பதன் உயர்வு மற்றும் தாழ்வுகளின் அடிப்படையில் உண்டாகின்ற ஏற்றத்தாழ்வுகள் என்பவை ப்ரபத்திக்கு இல்லாத

காரணத்தினால் தேசநியமம் மற்றும் காலநியமம் ஆகிய இரண்டும் ப்ரபத்திக்கு இல்லை. நீரில் நீராடுபவர்கள் தூய்மையானவர்கள், தூய்மை அற்றவர்கள் என்ற வேறுபாடு இன்றி நீராடுவது போன்று, ப்ரபத்தி என்பது இயல்பாகவே தூய்மையானது என்பதால், தூய்மையானவர் மற்றும் தூய்மை அற்றவர் என வேறுபாடு இன்றி அனைவரும் ஏற்கலாம்படியாக உள்ளதால், ப்ரகார நியமமும் ப்ரபத்திக்கு இல்லை. வர்ணம் போன்ற பிரிவுகளுக்கு உட்பட்டு இல்லாத காரணத்தினால், ஆத்மாவின் ஸ்வரூபத்திற்கு ஏற்றதாக உள்ளதால், இன்னவர்கள் மட்டுமே ஏற்கலாம் என்ற அதிகாரி நியமம் ப்ரபத்திக்கு இல்லை. இந்தக் கருத்தைக் கீழே உள்ள பரத்வாஜ ஸம்ஹிதையில் காணலாம் - ந ஜாதி பேதம் நகுலம் நலிங்கம் நகுணக்ரியா:, ந தேச காலௌ நாவஸ்தாம் யோகோ ஹ்யயமபேக்ஷதே; ப்ரஹ்ம க்ஷத்ர விசச் சூத்ரா: ஸ்த்ரியச்சாந்தர ஜாதய: ஸர்வ ஏவ ப்ரபத்யேரந் ஸர்வ தாதாரமச்யுதம் – ப்ரபத்தி என்னும் இந்த உபாயம் எப்படிப்பட்டது என்றால் இந்த உபாயம் உயர்ந்தவர்கள் தாழ்ந்தவர்கள் என்ற ஜாதி வேறுபாடுகளை ஏற்பதில்லை, குலங்களின் அடிப்படையில் உள்ள வேறுபாடுகளை ஏற்பதில்லை, ஆண் பெண் என்னும் வேறுபாடுகளை ஏற்பதில்லை, குணங்களுக்கு ஏற்ப செயல்படும் வேறுபாடுகளை ஏற்பதில்லை, தேசம் மற்றும் காலம் என்னும் வேறுபாடுகளை ஏற்பதில்லை, வயது போன்ற வேறுபாடுகளை ஏற்பதில்லை, அந்தணர் க்ஷத்ரியர் வைசியர் மற்றும் பெண்கள் போன்ற அனைவருமே அனைத்தையும் படைத்த அச்சுதனை அடைவார்கள் – என்றது. இப்படியாக ப்ரபத்திக்கு தேசம், காலம், முறைகள், அதிகாரி போன்ற எந்தவிதமான கட்டுப்பாடுகளும் இல்லை என்பதை பரத்வாஜ ஸம்ஹிதை உரைத்தது. மேலும் இதற்கு பல நியமம் இல்லை என்பதை ஸநத்குமார ஸம்ஹிதை - ப்ரபத்தே: க்வசிதப்யேவம் பராபேக்ஷா ந வித்யதே, ஸாஹி ஸர்வத்ர ஸர்வேஷாம் ஸர்வகாம பலப்ரதா – கர்மங்கள் போன்றவை மற்றவற்றின் உதவியை நாடுவது போன்ற நிலை ப்ரபத்திக்கு இல்லை; மாறாக அனைவராலும் எங்கும் விரும்பப்பட்ட அனைத்து பலன்களையும் அது அளிக்கும் – என்றது.

## 24. விஷய நியமமேயுள்ளது.

**அவதாரிகை -** இவை இல்லையாகில் மற்றும் சில நியமங்கள்தான் இதுக்குண்டோ வென்ன, அருளிச் செய்கிறார் (விஷய நியமமேயுள்ளதென்று).

**விளக்கம் -** இப்படியாக ப்ரபத்திக்குக் காலம், தேசம் போன்ற விதிமுறைகள்ஏதும் இல்லை என்றால், வேறு ஏதாவது விதிமுறைகள் ப்ரபத்திக்கு உண்டோ என்ற கேள்வி எழலாம். இதற்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** – அதாவது, இன்ன விஷயத்திலே செய்யவேணும் என்கிற நியமமே யிதுக்குள்ளதென்றபடி. இவையெல்லாம் தாமே மேலே உபபாதித்தருளுகிறாரிறே.

**விளக்கம்** - இன்ன விஷயத்தில் மட்டுமே செய்யவேண்டும் என்னும் விதிமுறை மட்டுமே ப்ரபத்திக்கு உள்ளது என்கிறார். இவற்றைத் தானே பின்னர் (சூர்ணை 26 தொடங்கி) அருளிச்செய்ய உள்ளார்.

25. கர்மத்துக்கு புண்யக்ஷேத்ரம் வஸந்தாதிகாலம் சாஸ்த்ரோக்தங்களான தத்தத் ப்ரகாரங்கள் த்ரைவர்ணிகர் என்றிவையெல்லாம் வ்யவஸ்திதங்களாயிருக்கும்.

**அவதாரிகை** - இதுக்கிவையொன்றுமில்லையாகில் பின்னையெதுக்குத்தான் இவையெல்லாமுள்ளதென்ன, அருளிச்செய்கிறார் (கர்மத்துக்கென்று தொடங்கி).

**விளக்கம்** – இவை எதுவும் ப்ரபத்திக்கு இல்லை என்றால், வேறு எதற்குத்தான் இவை உண்டு என்ற கேள்விக்கு விடை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம்** - கர்மமாவது ஜ்யோதிஷ்டோமாதிகள். புண்ய க்ஷேத்ரங்களாவன சாஸ்த்ரங்களில் பாவநதயா அபிஹிதங்களான தேசங்கள். "வஸந்தாதி" என்கிறவிடத்தில் ஆதிசப்தத்தாலே க்ரீஷ்ம சரச்சுக்ல க்ருஷ்ணபக்ஷ பூர்வாஹ்நாபராஹ்நாதி காலங்களைச் சொல்லுகிறது; வஸந்தே வஸந்தே ஜ்யோதிஷா யஜேத இத்யாதிகளாலே கால நியமம் சொல்லப்படா நின்றதிறே. சாஸ்த்ரோத்தங்களான தத்வத் ப்ரகாரங்களாவன சௌசாமசமந ஸ்நாந வ்ரத ஜபாதிரூபேண அவ்வவ கர்மங்களுக்கு அநுகுணமாக சாஸ்த்ர விஹிதங்களான அவ்வவ ப்ரகாரங்கள். (த்ரைவர்ணிகர்) என்றது உபநயந ஸம்ஸ்கார பூர்வகமாக வேதாதிகாரிகளானவர்களுக்கே வைதிக கர்மாதிகரமுள்ளதாகையாலே; இதுதான் க்ருஹமேதித்வ க்ருஷ்ண கேசித்வ வேத வேதாங்கயுக்த த்வாதிகளுக்கு முபலக்ஷணம். (வ்யவஸ்திதங்களாயிருக்கும்) என்றது நியதங்களாயிருக் கும்மென்றபடி.

**விளக்கம்** - கர்மம் என்பது ஜ்யோதிஷ்டோமம் போன்றவை ஆகும். புண்ய க்ஷேத்ரங்கள் எனறால் சாஸ்த்ரங்களில் தூய்மையான இடங்கள் என்று கூறப்பட்ட க்ஷேத்ரங்கள் ஆகும். சூர்ணையில் உள்ள "வஸந்தாதி" என்பதில் காணப்படும் "ஆதி" என்னும் பதமானது முதுவேனிற்காலம், கார்காலம், க்ருஷ்ணபக்ஷம்,

சுக்லபக்ஷம், காலை நேரம், மாலை நேரம் என்பதான காலங்களைக் கூறுகிறது. வஸந்தே வஸந்தே ஜ்யோதிஷா யஜேத – ஒவ்வொரு வஸந்த காலத்திலும் ஜ்யோதிஷ்டோமம் செய்யவேண்டும் - என்பதன் மூலம் காலத்திற்கான விதிமுறை கூறப்பட்டதைக் காண்க. “சாஸ்த்ரோத்தங்களான தத்வத் ப்ரகாரங்கள்” என்பதன் மூலம் ஆசமனம் போன்றவற்றைச் செய்தல், நீராடுதல், விரதம் மேற்கொள்ளுதல், ஜபம் இயற்றுதல் உள்ளிட்ட பலவற்றுடன் கூடியதான அந்தந்த கர்மங்களுக்குத் தேவையான அநுஷ்டானங்கள் என்று சாஸ்த்ரங்களில் கூறப்பட்டவை உணர்த்தப்பட்டது. “த்ரைவர்ணிகர்” என்பதன் மூலம் உபநயனம் முதலானவை உடைய வேத அதிகாரிகளுக்கு மட்டுமே வைதிக கர்மங்கள் இயற்றுவதற்கு அதிகாரம் உள்ளது என உணர்த்தப்பட்டது. இந்த அதிகாரியின் லக்ஷணங்கள் எவை என்றால் இல்லறத்தில் உள்ளவர்களாக இருத்தல், கருமையான முடியுடன் கூடியவர்களாக இருத்தல், வேத வேதாந்தங்கள் அறிந்தவர்களாக இருத்தல் போன்ற பலவாகும். “வ்யவஸ்தி” என்பதன் மூலம் நியதங்களாக இருக்கும் என்பது கூறப்பட்டது.

26. ”ஸ ஏஷ தேச: கால:” என்கையாலே இதுக்கு தேசகால நியமமில்லை.

**அவதாரிகை** - ப்ரபத்திக்கிவையொன்றுமில்லை என்று கீழ்ப்பண்ணின ப்ரதிஜ்ஞையை உபபாதிக்கையிலே ப்ரவ்ருத்தராய், ப்ரதமம் தேசகால நியம ராஹித்யத்தை யுபபாதிக்கிறார் ஸ ஏஷ: என்று தொடங்கி.

**விளக்கம்** - ப்ரபத்திக்கு இவை ஏதும் இல்லை என்று மேலே அருளிச்செய்தார். அதனை மேலும் விளக்க எண்ணியவராக முதலில் தேசம், காலம் போன்ற விதிமுறைகள் இல்லை என்பதை அருளிச்செய்கிறார்.

**வ்யாக்யானம் -** பத்த வைராச்ச பாபாச்ச ராக்ஷஸேந்த்ராத் விபீஷண:, அதேசகாலே ஸம்ப்ராப்தஸ் ஸர்வதா சங்க்யதா மயம் என்று முன்பு ஸ்ரீஜாம்பவான் மஹாராஜர் பெருமாளுக்கு விண்ணப்பஞ் செய்த பக்ஷத்தை தூஷிக்கிற திருவடி, அதேச காலே ஸம்ப்ராப்த இத்யயம் ஸவிபீஷண:, விவக்ஷாசாத்ர மேஸ்தீயம் தாந்நிபோத யதாமதி; ஸ ஏஷ கால தேச: காலச்ச பவதீஹ யதா ததா, புருஷாத் புருஷம் ப்ராப்ய ததா தோஷ குணாவபி; தௌராத்ம்யம் ராவணே த்ருஷ்ட்வா விக்ரமஞ்ச ததா த்வயி யுக்தமாகமநம் தஸ்ய ஸத்ருசம் தஸ்ய புத்தித: என்று ராவணனாலே அவமாநிதனாய் ஸ்வநிகர்ஷத்தை முன்னிட்டுக் கொண்டு சரணம் என்று வந்த

ஸ்ரீவிபீஷணாழ்வான், அதேசத்திலே அகாலத்திலே வந்தானென்று தேவரீருடைய மந்த்ரிகளாலே யாதொன்று சொல்லப்பட்டது. இந்த பக்ஷத்தில் விசேஷித்து எனக்கிந்த விவக்ஷையுண்டாகா நின்றது. அவன் வருகிறவளவில் யாதொரு தேசத்திலே யாதொரு காலத்திலே வந்தான், அவன் வரவுக்கு அந்த இதுவே தேசமும் அந்த இதுவே காலமுமாம் யாதொருபடி, அப்படிப்பட்ட விவக்ஷையை நானறிந்தவளவு விண்ணப்பஞ் செய்யக் கேட்டருள வேணும். எங்ஙனே யென்னில், தம: ப்ரக்ருதியாகையாலே பரஹிம்ஸையே யாத்ரையான ராவணனிற் காட்டில் ஸத்வோத்தரராகையாலே பரரக்ஷணம் யாத்ரையாயிருக்கிற தேவரீரை ப்ராப்யராக புத்திப் பண்ணி, அப்படியேயவனை விட்டுப் போராதொழிந்தால் அவனுடைய அக்ருத்யத்துக்கு ஸஹகாரியாய் அந்த ப்ராதிகூல்யத்தோடே முடிந்து போகையாகிற தோஷத்தையும், தார்மிகரான தேவரீருடனே கூடப்பெற்றால் தத் பலமாக தேவரீர் திருவடிகளில் கைங்கர்யத்தை லபித்து வாழுகையாகிற நன்மையையும் புத்தி பண்ணி, அப்படியே தேவரீர் திருவுள்ளத்திலே புண்படும்படி குற்றத்தைத் தீரக் கழியச் செய்து நிற்கிற ராவணன் தௌராத்ம்யத்தையும், துராத்மாக்களை அநாயாஸேந அழிக்கவல்ல தேவராண்பிள்ளைத்தனத்தையுங் கண்டால், விசேஷஜ்ஞனானவனுக்கு இவ்வரவு ப்ராப்தம், ந்யாயத்திலே ஸஞ்சரிக்குமவனுடைய புத்திக்குமிது ஸத்ருசம் என்றானிறே. ஆக இப்படி பாவசுத்தியையுடையனான ஸ்ரீவிபீஷணாழ்வான் சரணம் என்று வந்து தேசகாலங்களில் குறைப்பார்க்கக் கடவதல்ல, அவன் வந்துதுவே தேசமும் காலமும் என்று சரணாகதி தர்மஜ்ஞனான திருவடி நிர்ணயிக்கையாலே ப்ரபத்திக்கு தேசகால நியமமில்லையென்கை.

**விளக்கம்** - இராமாயணம் யுத்தகாண்டம் (17-57) – பத்த வைராச்ச பாபாச்ச ராக்ஷஸேந்த்ராத் விபீஷண:, அதேசகாலே ஸம்ப்ராப்தஸ் ஸர்வதா சங்க்யதா மயம் – மிகுந்த பாவங்கள் செய்தவனும், நம்மிடம் படைகொண்டவனும் ஆகிய இராவணனிடமிருந்து தகாத இடத்திலும், தகாத நேரத்திலும் விபீஷணன் வந்துள்ளான்; ஆகவே இவன் சந்தேகப்படக் கூடியவனாகவே உள்ளான் – என்று ஜாம்பவானும், சுக்ரீவனும் இராமனிடம் கூறினர். இதனை ஏற்க மறுத்த அனுமன் இராமாயணத்தில் (யுத்தகாண்டம் : 17-46) - அதேச காலே ஸம்ப்ராப்த இத்யயம் ஸவிபீஷண:, விவக்ஷாசாத்ர மேஸ்தீயம் தாந்நிபோத யதாமதி; ஸ ஏஷ கால தேச: காலச்ச பவதீஹ யதா ததா, புருஷாத் புருஷம் ப்ராப்ய ததா தோஷ குணாவபி; தௌராத்ம்யம் ராவணே த்ருஷ்ட்வா விக்ரமஞ்ச ததா த்வயி யுக்தமாகமநம் தஸ்ய ஸத்ருசம் தஸ்ய புத்தித: – இந்த விபீஷணன் தகாத இடத்தில், தகாத காலத்தில் இங்கு வந்துள்ளான் என்பதைக் குறித்து நான் சிலவற்றைக் கூற விரும்புகிறேன்;

எனது விருப்பத்தை நீ (இராமன்) அறிய வேண்டுகிறேன்; புருஷர்களில் தாழ்ந்தவனாகிய இராவணனைக் காட்டிலும் புருஷர்களில் உயர்ந்தவனாக உள்ள நீயே அடையத்தக்கவன் என்று விபீஷணன் அறிந்தான்; இராவணனிடம் இருந்தால் உண்டாகும் தோஷத்தையும், உன்னிடம் அடைக்கலம் அடைந்தால் ஏற்படும் மேன்மையையும் உணர்ந்தான்; இராவணனிடம் இருந்த தீமைகளையும், உன்னிடம் உள்ள ஆண்மையையும் பார்த்து வந்தான்; ஆகவே அவன் இங்கு வந்தது பொருத்தமானது, அவனுக்கு ஏற்றது - என்று கூறினான். அதாவது இராவணனால் துச்சமாக நடத்தப்பட்டவனாக, தனது தாழ்வு என்பதை முன்னிறுத்தியபடி அடைக்கலம் என்று விபீஷணன் வந்தான். இப்படி வந்தபோது இவன் தகாத இடத்தில், தகாத காலத்தில் வந்தான் என்று உன்னுடைய மந்த்ரிகளால் உரைக்கப்பட்டது. இந்தக் கருத்தில் எனக்கு விசேஷமான கருத்து சொல்வதற்கு விருப்பம் உண்டு. அவன் எந்த இடத்தில் வந்தான்; எந்த நேரத்தில் வந்தான் என்பதைக் குறித்து அவன் வருவதற்கு இதுவே சரியான இடம் என்றும், அவன் வருவதற்கு இதுவே சரியான காலம் என்றும் நான் உணர்ந்ததைக் கூற எனக்கு விருப்பம் உள்ளது (அதாவது விபீஷணன் வந்த இடமும், காலமும் எதுவாக இருந்தாலும் அதுவே சரியான இடமும், காலமும் ஆகும் என்று கருத்து). இதனை நான் அறிந்த அளவிற்குக் கூற, நீ (இராமன்) கேட்கவேண்டும்.

தமோ குணம் மிகுதியாக உள்ளதால் மற்றவர்களைத் துன்பத்தில் ஆழ்த்துவது என்பதையே தனது செயலாக உடைய இராவணனைக் காட்டிலும், ஸத்வ குணம் மிக்கவனாக நீ உள்ளதால் அனைவரையும் காப்பாற்றும் தன்மை கொண்ட உன்னை அடைவதே தகும் என்று விபீஷணன் உணர்ந்தான். இவ்விதம் செய்யாமல் அவன் இராவணனுடனேயே இருந்திருந்தால், அவனுடைய தீமைகளுக்குத் துணை போனவனாக, உன்னுடன் பகைமையுடன் மடிந்து போகக் கூடியவனாக இருக்கின்ற குற்றம் விபீஷணனுக்கு வந்திருக்கும். இந்தக் குற்றத்தையும், தர்மத்தை மட்டுமே செய்கின்ற உன்னுடன் இருந்தால் அதன் பலனாகிய உனது திருவடிகளின் கீழ் கைங்கர்யம் செய்தல் என்ற நன்மையையும் அவன் ஆராய்ந்தான். மேலும் உன்னுடைய மென்மையான திருவுள்ளத்தைப் புண்படுத்தும்படியாக பெருங்குற்றம் முழுவதுமாகச் செய்தபடி உள்ள இராவணனின் தீமை என்பதையும், தீயோர்களை அழிப்பதில் சற்றும் தயக்கம் காட்டாத உனது ஆண்மைத் தன்மை என்பதையும் நோக்கும்போது விபீஷணன் இங்கு வந்தது சரியானது ஆகும். இத்தகைய செயலானது நியாயத்தின்

வழிநிற்பவர்களின் அறிவிற்கும் ஏற்றதாகவே இருக்கும் – இப்படியாகவே அனுமனின் கருத்து உள்ளது.

ஆகவே தூய்மையான மனத்துடன் உள்ள விபீஷணன் சரணம் என வந்து நின்ற இடம் மற்றும் காலம் ஆகிய இரண்டிலும் குறை ஏதும் காண்பதற்கு இல்லை. அவன் வந்து சேர்ந்த இடமே சரணாகதிக்குச் சரியான இடம் என்றும், வந்த நேரமே சரியான நேரம் என்றும் சரணாகதியைப் பற்றி நன்கு அறிந்தவனாகிய அனுமன் முடிவு செய்ததால், ப்ரபத்திக்குக் காலம் மற்றும் இடம் என்பது போன்ற கட்டுப்பாடுகள் ஏதும் இல்லை என்றாகிறது.

ஸ்வாமி பிள்ளை லோகாசார்யர் திருவடிகளே சரணம்
ஸ்வாமி மணவாள மாமுனிகள் திருவடிகளே சரணம்

.......தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ப்ரபந்நஜந கூடஸ்தரான ஸ்வாமி நம்மாழ்வார் அருளிச் செய்த

# திருவாய்மொழி

## இதற்கு ஸ்வாமி வடக்குத் திருவீதிப் பிள்ளை அருளிச் செய்த முப்பத்தாறாயிரப்படி என்னும் ஈடு வ்யாக்யானம் மூலமும், எளிய தமிழ்நடையும்

(பகுதி – 28)

1-1-9 உளனெனி லுளனவ னுருவமிவ் வுருவுகள்
உளனல னெனிலவ னருவமிவ் வருவுகள்
உளனென விலனென விவைகுண முடைமையில்
உளனிரு தகைமையோ டொழிவிலன் பரந்தே

**பொருள்** – ஸர்வேச்வரன் உள்ளான் என்றால் உள்ளவன் ஆகிறான். அந்த நிலையில் உருவத்துடன் கொண்ட அனைத்து வஸ்துக்களும் அவனுடைய ஸ்தூலமான சரீரங்கள் ஆகின்றன. ஸர்வேச்வரன் இல்லை என்றாலும் உள்ளவனே ஆகிறான். அந்த நிலையில் இல்லாத பொருள்கள் அனைத்தும் அவனது ஸூக்ஷ்ம சரீரங்கள் ஆகின்றன. ஆகவே உளன் என்றும், இலன் என்றும் கூறப்படும் இவற்றைத் தனது குணமாகக் கொண்டவன் என்றால் - உருவமும் அருவமும் ஆகிய ஸ்தூல ஸூக்ஷ்ம பொருள்களைக் கொண்டவனாக எங்கும் உள்ளான் - என்பதாகிறது.

**அவதாரிகை** - ஸர்வசூந்யவாதியை நிரஸிக்கிறார். நிரஸிக்கிறபடிதானெ ன்னென்னில், பாஷ்யத்திலே சூந்யவாதியை நிரஸித்த க்ரமத்திலே. இவ்வாழ்வார்தாம் அடியாக பாஷ்யகாரர்க்கு அவனை நிரஸிக்கலாம்; இவர்தாம் அவனை நிரஸிக்கைக்கு அடியென்னென்னில் அதுவும் இவ்வாழ்வார் தம் பக்கலிலே உண்டு. புறம்பே சிலர் ப்ரஹ்மாதிகள் பக்கலிலே ஈச்வரத்வ ப்ரதிபத்தியைப் பண்ணி, ப்ரமாணங்களையும் அதுக்கு ஈடாக நியமித்துக் கொண்டு வந்து தோற்ற, தாம் அங்கீகரித்தவனே ஸர்வஸ்மாத்பரனென்னும், ஜகத்து அவனுக்கு சரீரதயா சேஷமென்றும், தத்ப்ரதிபாதக ப்ரமாணம் வேதமென்றும் தம்முடைய மதத்தை உபந்யஸித்து நின்றார் கீழ். இவை இத்தனையும் இல்லை என்னும்போது பூர்வபக்ஷமாக இவற்றை அங்கீகரித்து அநுபாஷித்துக் கழிக்க வேணுமிறே; அதில் இவற்றை அங்கீகரித்து அநுபாஷித்து அவனால் இல்லை

என்னப்போகாது. முதலிலே சூந்யமென்னில் ஸர்வ சூந்யவாதம் ஸித்தியாது. இனி உன்னைக் கேட்போம். நீதான், ஈச்வரனுளன் என்கிற சொல்லாலே அவனில்லாமையை ஸாதிக்கப் பார்க்கிறாயோ? இல்லை என்கிற சொல்லாலே இல்லாமையை ஸாதிக்கப் பார்க்கிறாயோ? என்ன; இங்ஙன் விகல்பிக்கைக்குக் கருத்தென்? என்ன, உளனென்கிற சொல்லாலே சொன்னால் உனக்கு அபிமதமான அபாவம் ஸித்தியாத ஓபாதி, இல்லை என்கிற சொல்லாலும் உனக்கு அநபிமதார்த்தமே காண் ஸித்திப்பது; ஆனபின்பு நீ இல்லை என்கிற சொற்கொண்டே அவன் உண்மையை ஸாதிப்பன். லோகத்தில் பாவாபாவ சப்தங்களுக்கு யாதொருபடி பொருள் கொள்ளுகிறோம். அப்படி கொள்ளில் நீ நினைக்கிற அர்த்தம் உன்னால் ஸாதிக்கப் போகாது. அங்ஙனே கொள்ளாயாகில் வாதந்தன்னில் உனக்கு அதிகாரமில்லை.

**விளக்கம்** – இங்கு அனைத்தும் சூந்யம் என்னும் வாதத்தைத் தள்ளுகிறார். எப்படி என்றால் ஸ்ரீபாஷ்யத்தில் எம்பெருமானார் தள்ளிய முறையில் இவரும் தள்ளுகிறார். இங்கு ஒரு கேள்வி எழலாம். இந்த ஆழ்வாரோ எம்பெருமானார் காலத்திற்கு முற்பட்டவராக இருப்பதால், ஆழ்வாரின் முறையைப் பின்பற்றி எம்பெருமானார் சூந்யவாதத்தை மறுத்தார் என்று கூறுவது சரி; ஆனால் இங்கு ஆழ்வார் அவனை எப்படி மறுத்தார்? ஆழ்வாருக்கு அதுவும் இயலும். எப்படி என்றால் - முன்பு ஒரு சிலர் நான்முகன் உள்ளிட்ட தேவர்களுக்கு ஈச்வரத்வம் கற்பித்து, அதற்கு ஈடாக சிலர் ப்ராமணங்களையும் கொண்டு வந்து நின்றனர். அப்போது ஆழ்வார் தான் கூறிய ஸர்வேச்வரனே அனைவரிலும் மேம்பட்டவன் என்றும், அவனது சரீரமாக உலகம் இருப்பதால் அவனது அடிமை என்றும், தான் கூறுவதற்கு வேதங்களே ப்ரமாணம் என்றும் தன்னுடைய கருத்தை 7 மற்றும் 8-ஆம் பாசுரங்களில் அருளிச்செய்தார். ஆழ்வார் தனது மனதில், "மேலே கூறப்பட்ட பாசுரங்களில் உள்ள ப்ரமாணங்களை சூந்யவாதி மறுத்தான் என்றால், அவற்றை முதலில் கூறிவிட்டு, அதன் பின்னரே அவனால் மறுக்கமுடியும். ஆனால் அவற்றைக் கூறினான் என்றால், அவனுடைய சூன்யவாதம் இல்லாமல் போய்விடும். மாறாக முதலிலேயே இல்லை என்று அவன் சொல்லிவிட்டால் ஸர்வஸூந்யவாதம் இல்லாமல் போய்விடும்", என்று எண்ணினார். அடுத்து சூந்யவாதியிடம் ஆழ்வார், "நீ ஈச்வரன் உளன் என்பதன் மூலம் அவனது இல்லாமையையே உணர்த்த எண்ணுகிறாயா அல்லது இல்லை என்ற சொல் மூலம் அவனது இல்லாமையைக் கூற நினைக்கிறாயா?", என்றார். இதற்குச் சூந்யவாதி, "இப்படியாக இரண்டுவிதமாகக் கேட்பதற்கு என்ன கருத்து?", என்றான். இதற்கு ஆழ்வார், "உளன் என்பதன் மூலம் உனக்கு விருப்பமான 'ஈச்வரன் இல்லாமை' என்பது தோன்றாது; இல்லை என்பதன் மூலமும் உனக்கு விருப்பம் இல்லாத தன்மையை நீ அடைகிறாய். அதன் பின்னர் 'இல்லை' என்ற சொல்லைக் கொண்டே அவன் உண்மையைக் கூறிவிடுவான். இந்த உலகத்தில் உண்மை

மற்றும் இன்மை ஆகிய சொற்களுக்கு எவ்விதமாகப் பொருள் கொள்கிறோம். அதே போன்று கொண்டால், நீ நினைக்கும் பொருள் உன்னால் நிரூபிக்க இயலாது. அப்படி நீ கொள்ளவில்லை என்றால் உனது வாதங்களில் அதிகாரம் இல்லை", என்றார் (இங்கு கூறப்பட்டதன் விளக்கம்: ஒரு பொருள் இங்கே உள்ளது, இப்போது உள்ளது, இப்படியாக இருக்கிறது என்பது பாவம் ஆகும். ஒரு பொருள் இங்கே இல்லை, இப்போது இல்லை, இப்படியாக இல்லை என்பது அபாவம் ஆகும். இப்படி இரண்டு விதங்களாலும் உண்மையே வெளிப்படுகிறது. ஆகவே உனது சூந்யவாதம் செல்லாது. இப்படிப் பொருள் கொள்ளாமல் வாதம் செய்தால் அந்த வாதமே சூந்யமாக உள்ளதால் அந்த வாதத்தில் அதிகாரம் இல்லை).

**வ்யாக்யானம்** – (உளனெனில்) ஈச்வரஸத்பாவம் முதலிலே இல்லை என்கிற நீ, அவன் உண்மைக்கு இசையாயிறே. நான் உளனென்கிறாப்போலே சொல்லில்தான் உளன். (அவனுருவம் இவ்வுருவுகள்) – ஈசிதவ்ய நிரபேக்ஷமாகவன்றிறே ஈச்வரன் உளனாவது; யஸ்யாத்மா சரீரம், யஸ்ய ப்ருதிவீ சரீரம் என்கிறபடியே ஜகத்து அவனுக்கு சரீரதயா சேஷமாய் உண்டாம். உளனலன் என்பாயோ?, அப்போது அபாவதர்மியாய்த் தோற்றும்.

**விளக்கம்** – (உளனெனில்) - நான் உளன் என்று கூறுவது போன்று சொல்லில் தானே உளன். இறைவனது உண்மையை முதலிலே இல்லை என்றே கூறும் அவன் இறைவனின் உண்மைக்கு இசையமாட்டான் என்பதால் "உளன் எனில்" என்றார். (அவனுருவம் இவ்வுருவுகள்) - எம்பெருமான் உளன் என்றால் அவனால் நியமிக்கப்படும் உலகத்துடன் அவன் கூடியே இருத்தல் வேண்டும். அவன் உளன் என்னும்போது யஸ்யாத்மா சரீரம் – யாருக்கு ஆத்மா சரீரமோ, யஸ்ய ப்ருதிவீ சரீரம் - யாருக்கு உலகம் சரீரமோ - என்னும்படி இந்த உலகம் அவனுக்குச் சரீரமாக இருப்பதால் அவனுக்கு அடிமைப்பட்டதாய் உள்ளது. அவன் "உளன் அல்லன்" என்று கூறினால், அந்த "இல்லை" என்னும் தத்துவமாகவும் அவனே இருப்பான்.

**வ்யாக்யானம்** – (அவனருவம் இவ்வருவுகள்) – அப்போது நாஸ்திசப்தவாச்யமாய் அவஸ்தாந்தர பாக்காய்க் கொண்டு இவற்றின் உண்மை தோற்றும். "கடோஸ்தி" என்றால் வாயும் வயிறுமான ஆகாரம் தோற்றும். "கடோ நாஸ்தி" என்றால் நாஸ்தித்வ தர்ம விசிஷ்டமாய்த் தோற்றும், இங்கில்லை என்றதாகில் வேறோரிடத்திலே உண்டாம்; இப்போதில்லை என்றதாகில் வேறொரு கால விசேஷத்திலே உண்டாம்; எங்கும் எப்போது ஒரு ப்ரகாரத்தாலும் கடமில்லையென்னக் கூடாமையால் நிருபாதிக நிஷேதம் இல்லையிறே.

**விளக்கம்** – (அவனருவம் இவ்வருவுகள்) – அவன் அல்லன் என்று கூறும்போது, வேறு ஒரு தன்மையை அடைந்ததாகப் பொருள் உண்டாகிவிடும். எப்படி? குடம் உள்ளது என்றால் வாயும் வயிறுமாகக் குடம் தென்படும். குடம் இல்லை என்றால், இல்லை என்னும் தன்மையுடன் வேறு ஒரு வகையாகத் தோன்றும் அல்லவோ? அதாவது "இங்கு இல்லை" என்றால் வேறு இடத்தில் உண்டு; "இப்போது இல்லை" என்றால் வேறு ஒரு காலகட்டத்தில் உண்டு; எங்கும், எப்போதும், ஒருவகையான குடம் இல்லை என்று இல்லாததால் காலதேசத்துக்கு உட்படாத விலக்கு இல்லை அல்லவா?

**வ்யாக்யானம்** – (உளனென இலனென இவைகுணமுடைமையில்) – உளனாகிற இத்தையும், இலனென்கிற இத்தையும், இவையிரண்டையும் குணமாக உடையனாகையாலே, இவை இரண்டும் இரண்டு தர்மமாயிற்று. (உளனிருதகைமையொடு) – உளனென்கிற சொல்லாலும் இலனென்கிற சொல்லாலும் சொன்ன இரண்டு ஸ்வபாவத்தாலும் உளனானான். (ஒழிவிலன் பரந்தே) – நான் உளனென்கிற சொல்லாலே உண்மையை ஸாதித்தேன், நீ இலனென்கிற சொல்லாலே உண்மையை ஸாதித்தாய், ஆக இருவருமாக உண்மையை ஸாதித்தோம். இனி அவன் உளனானால் உளனாமாபோலே ஸவிபூதிகனாயே உளனாக அமையாதோ என்கிறார்.

**விளக்கம்** – (உளனென இலனென இவைகுணமுடைமையில்) – உளன் என்கிற இதனையும், இலன் என்கிற இதனையும் குணமாக ஈச்வரன் கொண்டதால் இவை இரண்டும் தர்மங்கள் ஆனது. (உளனிருதகைமையொடு) – உளன் என்ற சொல்லாலும், இலன் என்றசொல்லாலும் கூறப்பட்ட இரண்டு தன்மைகளையும் கொண்டவனாக உள்ளவன் ஆகிறான். (ஒழிவிலன் பரந்தே) – நான் "உளன்" என்ற சொல்லால் அவன் உள்ளதை நிரூபித்தேன்; நீ "இலன்" என்ற சொல்லால் அவன் உள்ளதை நிரூபித்தாய். ஆக நாம் இருவருமாகச் சேர்ந்து அவன் உள்ளதை நிரூபித்தோம். இனி அவன் உளன் என்றால் உளன் என்பது போன்று, விபூதியுடன் கூடிய உளனாக இருப்பது இயலாதோ?

ஸ்வாமி நம்மாழ்வார் திருவடிகளே சரணம்
ஸ்வாமி நம்பிள்ளை திருவடிகளே சரணம்
ஸ்வாமி வடக்குத்திருவீதிப்பிள்ளை திருவடிகளே சரணம்

...தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

தொண்டரடிப்பொடியாழ்வார் அருளிச் செய்த

# திருமாலை

(பகுதி – 52)

37. தெளிவிலாக் கலங்கல் நீர்சூழ் திருவரங்கத்துள் ஓங்கும்
ஒளி உளார் தாமே அன்றே தந்தையும் தாயும் ஆவார்
எளியதோர் அருளும் அன்றே என் திறத்து எம்பிரானார்
அளியன் நம் பையல் என்னார் அம்ம ஓ கொடியவாறே

**பொருள்** – எப்போதும் பொங்கிப் பாய்வதால் தெளிவாக இல்லாமல், கலங்கியபடியே உள்ள நீரைக் கொண்டதான காவேரி நதியால் சூழப்பட்டபடி திருவரங்கம் பெரியகோயில் உள்ளது. அந்தக் கோயிலே ப்ரகாசம் அடையும்படியாக ஒளியுடன் கூடியவனாக அழகியமணவாளன் உள்ளான். அப்படிப்பட்ட அவனே நமக்குத் தந்தையும் தாயுமாக உள்ளான். இவன் என் பொருட்டு செய்யவேண்டியது மிகவும் எளிதானது. அது என்ன? எனக்கு அனைத்துமாக உள்ள அவன் என்னைக் குறித்து, "நமது பையல் இவன். நமது கருணைக்கு ஏற்புடையவன்", என்று கூறவேண்டும். ஆனால் அதனைச் செய்யாமல் உள்ளானே! இவனது மனம் எத்தனை கொடியதாக உள்ளது?

**அவதாரிகை** – இப்படிக் கூப்பிடச் செய்தேயும் பெரியபெருமாள் இரங்கி மா சுச: என்னக் காணாமையாலே தம்மையொழிய வேறே எனக்கொரு பந்துக்களுண்டாய் இருக்கிறாரோ? ப்ரயோஜநாந்தரபரனாய் பந்தகமாயிருந்துள்ள புருஷார்த்தத்தை அபேக்ஷிக்கிறானென்றிருக்கிறாரோ? நம்முடையவனென்று அங்கீகரிக்க நான் பிழைப்பேனானால், இத்தனையும் செய்யாதே ஆர்த்தத்வநி கேட்டுக் கண்ணுறங்கும்படி, அம்மே! இவர் திருவுள்ளம் இப்போது இங்ஙனே கொடியதாய்த்தாகாதே என்று இன்னாதாகிறார்.

**விளக்கம்** – இப்படியாகப் பலவிதமாக ஆழ்வார் கூக்குரல் இட்டபோதும் அழகியமணவாளன் இரக்கம் கொண்டு, "வருத்தம் கொள்ளாதே", என்று கூறவில்லை. ஆகவே ஆழ்வார் தனது மனதில், "அவனைத் தவிர எனக்கு ஆறுதலாகப் பல உறவினர்கள் உண்டு என்று கருதி அவன் பேசாமல்

உள்ளானோ? ஸம்ஸாரத்தில் ஈடுபட வைக்கின்ற பல விஷயங்களை நான் விரும்புகிறேன் என்று எண்ணுகிறானோ? 'இவன் நம்முடையவன்' என்று என்னை ஏற்றுக்கொண்டால் போதுமானது, நான் பிழைப்பேனே! அதனைச் செய்யாமல், என்னுடைய புலம்பல்களைக் கேட்டபடி கண்வளர்கிறானே! இவனது மனம் இத்தனை கொடியதாக மாறியதே! அம்மம்மா!", என்று எண்ணுகிறார்.

**வ்யாக்யானம்** – (தெளிவிலாக்கலங்கல்) – ஊற்றுமாறித் தெளிகைக்கு அவகாசமில்லாதபடி மேன்மேலும் பெருகுகையாலே கலக்கம் மாறாதாய்த்து. இவரைப் போலேயாய்த்து ஆறும். ப்ராப்த்திக்கு முன்பு சோகத்தாலே கலங்கியிருப்பர்; கிட்டினால் ப்ரேமத்தாலே கலங்கியிருப்பர்; ஆறும் கோயிலுக்கு மேற்கு பெரியபெருமாளைப் காணப்புகா நின்றோமென்னும் ஹர்ஷத்தாலே கலங்கிவரும்; கோயிலுக்குக் கிழக்குப் பட்டால் பிரிந்துபோகிற சோகத்தாலே கலங்கிப்போம். கோயிலருகு வழிபோவாரில் சேதநாசேதந விபாகமில்லை போலே காணும் கலக்கத்துக்கு. (நீர்சூழ்) – "அதனில் பெரிய என்னவாவறச் சூழ்ந்தாய்" என்று பெரியபெருமாள் என்னளவிலிருக்குமாபோலேயாய்த்து கோயிலை விளாக்குலை கொண்டிருக்கும்படி. துக்தாப்தி இத்யாதி. ரத்நகமான க்ஷீராப்தி தமப்பனார்; நான் இவ்விடத்தில் ஜநநீ; ஸாக்ஷால்லக்ஷ்மி பெண்; மணவாளப்பிள்ளை ஸர்வ லோகோத்தரான அழகியமணவாளப்பெருமாள்; இதுக்கு ஸத்ருசமாக அங்கமணி செய்யலாவதேதென்று விசாரித்துக்கொண்டு வருகிறாப்போலேயாய்த்து ஆறு பெருகி, மத்தகஜம்போலே பிசுகிப் பிற்காலித்து வருகிறபடி. (திருவரங்கத்துளோங்குமொளியுளர்) – ஆற்றுப்பெருக்கை நீக்கித் தரைகண்டு உள்புக அரிதாமாபோலேயாய்த்து பெரியபெருமாள் தேஜஸ்ஸை நீக்கிப் புக்கு அதுக்கு ஆச்ரயமான வடிவழகு காண அரிதாயிருக்கிறபடி. பரமபதத்திலொளி பகல்விளக்கு என்னும்படியாய்த்து. அந்தகாரத்தில் தீபம்போலே குறைவாளரான ஸம்ஸாரிகளுக்கு உதவப்பெற்ற பின்பு ஒளி மிக்கிருக்கிறபடி. (ஓங்குமொளி) – நித்யஸூரிகள் நடுவேயிருக்கிறபோது, ஆதித்யர்கள் நடுவே ஆதித்யன் இருக்குமாபோலேயாய்த்து இருப்பது. இங்கு ஆர்த்தர் மிகவுமுண்டாகையாலே தத்ரக்ஷணம் பண்ணி ஒளியும் மிகா நிற்குமத்தனை.

**விளக்கம்** – (தெளிவிலாக் கலங்கல்) – காவேரி நதியில் நீரின் வேகத்தில் சற்று மாறுபாடு உண்டானால் தெளிவாக இருக்க வாய்ப்புள்ளது. ஆனால் அவ்விதம் தெளிவதற்கு சற்றும் இடம் அளிக்காமல் நீர் பெருகியபடி உள்ளதால் எப்போதும் கலங்கியபடியே உள்ளது. ஆழ்வாரைப் போன்றே நதியும் கலங்கியபடி உள்ளது. அழகியமணவாளை அடைவதற்கு முன்பாக "அவனை இன்னமும் அடையவில்லையே" என்று வருத்தம் கொண்டபடி இருப்பார்; அவனை அடைந்த பின்னர் அவன் மீது காதல் கொண்டு கலக்கத்துடன் இருப்பார். இது போன்றே காவேரி நதியானது திருவரங்கம் பெரியகோயிலின் மேற்குத் திசையில் இருந்து ஓடி வரும்போது, "அழகியமணவாளனைக் காணப்போகிறோம்" என்ற ஆனந்தம்

காரணமாக வேகமாக வரும்; பெரியகோயிலின் கிழக்குத் திசைக்குச் சென்ற பின்னர் "இவனை விட்டுப் பிரியப்போகிறோமே" என்ற சோகம் காரணமாக கலங்கியபடிச் செல்லும். ஆகவே, பெரியகோயிலின் அருகில் செல்லும்போது கலக்கத்துடன் செல்வதற்குச் சேதனம் மற்றும் அசேதனம் என்னும் வேறுபாடு இல்லை என்றாகிறது. (நீர்சூழ்) – திருவாய்மொழி (10-10-10) - அதனில் பெரிய என்னவாவறச் சூழ்ந்தாய் – என்னும்படியாக பெரியபெருமாள் ஆழ்வார்களிடம் கொண்ட ப்ரேமையால் அவர்களைச் சூழ்ந்தபடி உள்ளது போன்று, இந்தக் காவேரி அவனைச் சூழ்ந்து ஓடுகிறது. ஸ்வாமி பராசரபட்டரின் ஸ்ரீரங்கராஜஸ்தவம் (1-21) – துக்தாப்தி: - என்னும் ச்லோகம் இங்கு கொள்க (குறிப்பு: இதனை அடியேனின் இணையதளத்தில் பெறலாம்). அந்தச் ச்லோகத்தில் இவ்விதம் கூறுகிறார்: இரத்தினங்கள் பல நிறைந்த திருப்பாற்கடல் பெண்ணின் தந்தை, நான் (காவேரி) பெண்ணின் தாய், பெண் யார் என்றால் ஸ்ரீரங்கநாச்சியார்; இவளது மாப்பிள்ளை யார் என்றால் அனைவரையும் விட சிறந்தவனான அழகியமணவாளப்பெருமாள் – என்று கூறியது காண்க. இங்கு பெற்ற பெண்ணிற்கும் மாப்பிள்ளைக்கும் சீராக என்ன செய்வது என்று எண்ணியபடி, கலங்கியபடி, மதம் கொண்ட யானை போன்று தயங்கித் தடுமாறி காவேரி வருகிறாள் என்றார். (திருவரங்கத்துள் ஓங்கும் ஒளியுளார்) – காவேரியின் வெள்ளப்பெருக்கை நீக்கி, அதன் தரையைக் காண்பது அரிதாக உள்ளது போன்று, பெரியபெருமாளின் ஒளியை நீக்கி அவன் சயனித்துள்ள இருப்பிடத்தின் வடிவழகைக் காண்பதற்கு அரிதாக உள்ளது. இவன் திருவரங்கத்தில் வந்து சயனித்த பின்னர், பரமபதத்தில் உள்ள ஒளியானது பகல் ஒளி போன்று குறைந்துபோனது. இருளில் உள்ள தீபம் மிகவும் ப்ரகாசமாக உள்ளது போன்று, ஞானம் அற்ற ஸம்ஸாரிகளுக்கு மத்தியில் உதவுகின்ற இவனது ஒளி இங்கு வந்த பின்னர் மேலும் ஓங்கியது. (ஓங்கும் ஒளி) – நித்யஸூரிகளின் நடுவில் இவன் உள்ளபோது, சூரியன்களுக்கு நடுவில் மற்றுமொரு சூரியன் உள்ள அளவே இவனது ஒளி இருந்தது. ஆனால் இங்கு வருத்தம் கொண்டவர்கள் பல உள்ளதால் அவர்களுக்கு உதவும்போது இவனது ஒளி பன்மடங்கானது.

**வ்யாக்யானம்** – (ஒளியுளார் தாமேயன்றே தந்தையும் தாயுமாவார்) – அவதாரணத்தாலே மாதா பிதா என்று தொடங்கி, நாராயண: என்கிற பொதுவிலன்று. வ்யூஹாவஸ்தை, விபவாவஸ்தை என்கிற விசேஷங்களிலுமன்று. இனி எனக்குத் தந்தையும் தாயுமாவார் பெரியபெருமாளே என்கிறார். தம்மையொழிய வ்யக்த்யந்தரத்திலேயும் ஒரு பந்தமுண்டென்று ஆறியிருகிறாரோ? ஸர்வேஷாமேவ லோகாநாம் இத்யாதி. இச்லோகந்தான் தர்மபுத்ராதிகள் வநவாஸம் பண்ணுகிற ஆபத்தசையிலே க்ருஷ்ணனும் ஸத்யபாமைப் பிராட்டியும் எழுந்தருள, அத்தைக்கேட்ட ஸ்ரீபராசராதி மஹர்ஷிகள் வந்து மார்க்கண்டேய பகவானைக் கண்டு பேரோலக்கமாகவிருக்க; தர்மபுத்ரன், "இவ்வாபத்துக்கு ஆச்வாஸ ஹேதுவாக எனக்கொரு நல்வார்த்தை அருளிச்செய்ய வேணும்", என்று

ரிஷிகளைக் கேட்க; அவர்கள் சொன்னவை அடங்கப் பூர்வபக்ஷித்து ஸ்ரீமார்க்கண்டேய பகவான் எழுந்திருந்து சொன்னதாயிருக்கும். பின்பு சீராமப் பிள்ளையுடைய ஆபத்தசையிலே பட்டர் அருளிச்செய்ததாயிருக்கும். (தந்தையும் தாயுமாவார்) – ப்ரியத்துக்கும் கடவர், ஹிதத்துக்கும் கடவர்.

**விளக்கம்** - (ஒளியுளார் தாமேயன்றே தந்தையும் தாயுமாவார்) – இங்கு "தாமே" மற்றும் "அன்றே" என்பதில் உள்ள ஏவகாரம் மூலம் என்ன கூறுகிறார்? ஸுபால உபநிஷத் – மாதா பிதா – என்று தொடங்கி, நாராயண: - நாராயணனே தாயும் தந்தையும் – என்று கூறுவது போன்று பொதுவாக அல்ல என்கிறார்; வ்யூஹம் மற்றும் விபவம் போன்று பொதுவாக அல்ல என்கிறார்; இவற்றிலும் மாறுபட்டு பெரியபெருமாள் மட்டுமே தனக்குத் தந்தையும் தாயுமாக உள்ளான் என்று உணர்த்துகிறார். இப்படியாக இவனைத் தவிர வேறு உறவினர்கள் யாரும் இல்லாதபோது, வேறு யாரேனும் எனக்கு உள்ளார்கள் என்று இவன் எண்ணுவதால், ஏதும் பேசாமல் சயனித்துள்ளானோ? மஹாபாரதம் ஆரண்யகாண்டத்தில் உள்ள - ஸர்வேஷாமேவ லோகாநாம் – அனைத்து உலகிற்கும் தந்தையும் தாயும் இவனே – என்னும் ச்லோகம் இங்கு கொள்ளவேண்டும். இந்த ச்லோகம் மார்க்கண்டேய மஹரிஷி அருளியது ஆகும். இந்த ச்லோகம் பிறந்த நிகழ்வு என்ன? பாண்டவர்கள் வனவாஸம் செய்யும்போது அவர்களைக் காண்பதற்காக க்ருஷ்ணனும் ஸத்யபாமாவும் எழுந்தருளினர். இதனைக் கேள்விப்பட்ட பராசரர் உள்ளிட்ட பல மஹரிஷிகள் மார்க்கண்டேய மஹரிஷியை முன்னிறுத்தி அங்கு சபையில் வீற்றிருந்தனர். அப்போது தர்மன் அந்த மஹரிஷிகளிடம், "இந்த ஆபத்துக்காலம் எனக்கு நீங்குவதற்குக் காரணமாக ஒரு வழியை நீங்கள் உரைக்கவேண்டும்", என்று வேண்டினான். அவர்கள் பலவிதமான மார்க்கங்களை உரைத்தனர். இவர்கள் கூறிய அனைத்தையும் மறுத்து, மார்க்கண்டேய மஹரிஷி மேலே உள்ள ச்லோகத்தை உரைத்து, நாராயணனைப் பற்றுவதே மார்க்கம் என்றார். இந்த ச்லோகத்தை ஸ்வாமி பராசரபட்டர் தனது சகோதரரான சீராமப்பிள்ளையின் ஆபத்துக்காலத்தில் உரைத்தார் என்று ஐதிஹம். (தந்தையும் தாயுமாவார்) – தாய் போன்று நமக்கு இனிமையாக உள்ளதையும், தந்தை போன்று நமக்கு நன்மையை அளிப்பதையும் பார்த்துப்பார்த்துச் செய்பவன் அழகியமணவாளன் மட்டுமே என்கிறார்.

**வ்யாக்யானம்** – (எளியதோரருளுமன்றே என்திறத்து) – என் விஷயத்தில் மலையையெடுத்து ரக்ஷிக்கவேணுமோ? உம்மையொழிய வேறேயொரு ப்ரயோஜநத்தைக் கணிசித்தேனாய் அத்தைக் கொடுத்துவிடுகிறோமென்று ஆறியிருக்கிறீரோ? ஸ்ரீவிபீஷணாதிகள் ரக்ஷணம்போலே வில்லும் கோலும் எடுத்து ரக்ஷிக்கவேண்டித்தானிருக்கிறீரோ? குளிர ஒரு கடாக்ஷங்கிடீர் என் விஷயத்தில் பண்ண வேண்டுவது. (எம்பிரானார்) – எனக்கு உபகாரகரானவர்.

இன்னாதாகிற தசையிலும் உபகாரகனென்பானென் என்னில், செய்த அம்சத்தை இல்லை செய்யுமவரல்லாமையாலே அத்தை முன்னிடுகிறார். அடியிலே முறையை உணர்த்தி, அதுக்குமேலே ப்ராப்யப்ராபகங்கள் தாமே என்னுமிடத்தை உணர்த்தி, இப்போதும் நம் கூப்பீடு கேட்க வந்து ஸந்நிஹிதராயிருக்கிற ஆகாரமுண்டிறே.

**விளக்கம்** - (எளியதோர் அருளுமன்றே என்திறத்து) – என்னுடைய விஷயத்தில், என்னைக் காப்பாற்ற கோவர்த்தன மலையை எடுப்பது போன்ற கடினமான செயல்கள் ஏது அவசியம் இல்லையே! உன்னைத் தவிர நான் வேறு எதாவது பயனை வேண்டி நிற்கிறேன் என்று எண்ணி, அதனைக் கொடுத்துவிடலாம் என நினைத்துக் கொண்டு, பேசாமல் உள்ளாயோ? விபீஷணனைக் காப்பாதற்காக வில்லையும், பாண்டவர்களைக் காப்பதற்குத் தேரோட்டும் குச்சியையும் எடுத்துக் காப்பது போன்று இவனைக் காப்பாற்ற வேண்டுமா என நினைத்துக் கொண்டு, பேசாமல் உள்ளாயோ? எனது விஷயத்தில் நீ அது போன்று எதனையும் செய்யவேண்டாம், என்னை ஒருமுறை நன்றாக நோக்கினாலே போதுமானது. (எம்பிரானார்) – எனக்கு அனைத்து உதவிகளையும் செய்பவன். சற்று முன்னர் இவன் தன்னைப் பார்க்கவோ பேசவோ செய்யவில்லை என்றார், ஆனால் இங்கு தனக்கு உதவுபவன் என்கிறார், இது ஏன்? தனக்கு அழகியமணவாளன் இதுவரை செய்த உதவிகளை மறந்துவிட்டு, “ஏதும் செய்யவில்லை”, என்று கூறுபவர் அல்லர் இவர். ஆகவே அதனைக் கூறுகிறார். அப்படி என்ன செய்தான்? தனக்கும் இவருக்கும் உள்ள உறவுமுறையை முதலில் உணர்த்தினான்; அடையவேண்டிய இலக்கும், அந்த இலக்கை அடையவைக்கும் உபாயமும் தானே என்று உணர்த்தினான்; இப்போது இவர் அழைக்கும்போது ஓடிவருவதற்கு எளிதாக, மிகவும் அருகில், திருவரங்கத்தில் வந்து கண்வளர்கிறான்.

**வ்யாக்யானம்** – (அளியன் நம் பையலென்னார்) – “அளி” என்று தண்ணளி. “இவன் நமக்கு நல்லன், நம்முடைய பையல்” என்று ஒரு வார்த்தை அருளிச்செய்யக் கேட்கவாய்த்து இவர் ஆசைப்படுகிறது; “ஆழ்வீர்” என்னுமது இவர்க்கு அஸஹ்யமாய்த்து. சேஷபூதரான நாம் இவ்வர்த்தங்களை நினைத்திருக்க அமையாதோ? அவன் சொல்லவேணுமோ என்னில், அதுபோராது. சேஷியானவனும் இதுக்கு மேலெழுத்திடுமன்றாய்த்து சேஷத்வம் நிலை நின்றாவது. மணக்கால்நம்பி, “நம்மாணி திருமகிழ்மாலை மார்வனுக்குத் திற”, என்றாரிறே. “பிள்ளைப்பிள்ளையாழ்வான் வாயாலே ‘தம்பி அப்பிள்ளையாழ்வான் நம்மாணி’ என்னப்பெற்றேன்”, என்றாரிறே.

**விளக்கம்** - (அளியன் நம் பையலென்னார்) – “அளி” என்றால் கருணை என்பதாகும். அழகியமணவாளன் தன்னைக் குறித்து, “இவன் நமக்கு மிகவும் வேண்டியவன். நம்முடைய கருணைக்கு இலக்காக வல்லவன்”, என்று கூறவேண்டும் என ஆசைப்படுகிறார். ஆனால் அழகியமணவாளனோ இவரை

“ஆழ்வீர்” என்று அழைக்கிறான். இப்படி இவன் அழைப்பதை இவரால் பொறுக்க இயலவில்லை. இங்கு ஒரு கேள்வி எழலாம். அவனுடைய அடிமைகளாக உள்ள நாம் அவனுடைய கருணைக்கு இலக்காவோம் என்பதை நாமே எண்ணிக் கொண்டால் போதாதோ? இப்படி அவன் எண்ணவேண்டுமோ? இதற்கு விடை – நாம் எண்ணுவது மட்டும் போதாது. நம்மை அடிமைகளாகக் கொண்டவனும் அப்படியே எண்ணி நம்மை அழைத்தால் மட்டுமே அடிமைதனம் என்பது நிலைநிற்கும் என்கிறார். மணக்கால்நம்பியின் திருமாளிகை வாசலிலே அவரது சீடரான திருமகிழ்மாலை மார்வன் வந்து அழைத்தார். அப்போது மணக்கால்நம்பி, ”திருமகிழ்மாலை மார்வனுக்குக் கதவைத் திற”, என்று கூறாமல், “நம் பிள்ளையான திருமகிழ்மாலை மார்வனுக்குக் கதவைத் திற”, என்றார். இது போன்றே அப்பிள்ளையாழ்வான், “பிள்ளைப்பிள்ளையாழ்வான் தன்னுடைய திருவாயால் என்னை ‘தம்பி அப்பிள்ளையாழ்வான் நம் பிள்ளை’ என்று கூறும் பேறு பெற்றேன்”, என்பார். இது போன்று அழகியமணவாளன் தன்னை அழைக்கவேண்டும் என்கிறார்.

வ்யாக்யானம் – (அம்ம ஓ கொடியவாறே) – ஆர்த்தத்வநி கேட்டால் எழுந்திருக்க வேண்டாவோ? ஆர்த்தத்வநி கேட்டும் இவர் கண்ணுறங்குவதே! இவர் திருவுள்ளம் இங்ஙனே கொடிதாய்த்தாகாதே! அம்மே! இவர் ஸ்வபாவமிருந்தபடியென் என்கிறார்.

விளக்கம் – (அம்ம ஓ கொடியவாறே) – ஆழ்ந்த வருத்தம் கொண்ட ஒருவனின் கூக்குரல் கேட்டவுடன் எழுந்து ஓடி வரவேண்டாமோ? அதனைக் கேட்டும் இவன் எழாமல் உறங்குபவன் போன்று உள்ளானே! இவனது மனம் இத்தனை கொடியதாக மாறிவிட்டதே! அம்மம்மா! இவனது ஸ்வபாவம் எத்தனை கொடியதாக உள்ளது! என்கிறார்.

தொண்டரடிப்பொடியாழ்வார் திருவடிகளே சரணம்

ஸ்வாமி பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்

… தொடரும்